விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு-06 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 27 ஞாயிற்றுக்கிழமை (13.11.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 329

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்

# தமிழ்க் கூட்டமைப்பின் முடிவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தி

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் அக்கறை காட்டத்தேவையில்லையென்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முடிவுக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க அதிருப்தி அடைந்துள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தமிழ் மக்களின் வாக்குகளை எதிர்பார்த்திருந்த அவருக்கு தமிழ்க்கூட்டமைப்பின் முடிவு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் கூறினார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரையில் கிளைமோர்த் தாக்குதல் இரு முஸ்லிம்கள் பலி; ஐவர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை உழவு இயந்திரம் ஒன்று கிளைமோரில் சிக்கியதில் அதில் பயணம் செய்த இரண்டு முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

மேலும் ஐந்து பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். வாகரைப்பிரதேசத்தில் கயூவத்தைக்கும் 31 ஆவது மைல் கல்லுக்குமிடையில் இச் சம்பவம் இடம் பெற் றுள்ளது.

கொல்லப்பட்டவர் ஓட்டுமாவடியைச் சேர்ந்த சாகுதாவூர் முஹமட் தாரீவ் (வயது 25) மற்றும் அஹமட் லெவ்வை அவம்பாவா (வயது 45) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களும் காயமடைந்தவர்களும் மரவியாபாரத்துடன் தொடர்புடையவர்கள் என்றும் குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள காட்டுக்குள் கடந்த மூன்று நாட்களாக தங்கியிருந்து மரங்களைத் தறித்து இரண்டு உழவு இயந்திரங்களில் அவற்றை ஏற்றிக் கொண்டு பிரதான பாதை வழியாக திரும்பாமல் குறுக்குப் பாதையூடாக திரும்பிக் கொண்டிருக்கை ( 12 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் – மகிந்தவுக்கிடையிலான நேரடி விவாதம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர் கட் சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையில் நடைபெறவிருந்த நேரடி விவாதத்தை கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பு பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பினை அடுத்தே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கு குறுகிய காலமே இருப்பதால் நேரடி விவாதத்தை கைவிடுவதென இரு தரப்பினரும் தீர்மானித்துள்ளனர்.

நேரடி விவாதத்தை ஆரம்பிப்பது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்காவின் சார்பில் மிலிந்த மொறகொடவும் மகிந்த ராஜபக்ஷவின் சார்பில் டளஸ் அழகப்பெருமாளுக்குமிடையில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது. சந்திப்பின் பின்னர் இருவரும் கூட்டறிக்கையென்றை வெளியிட்டனர்.

உத்தேச விவாதத்தை நடத்துவதற்கான இடம், விவாதத்தின் உள்ளடக்கம் என்பன தொடர்பாக இரு பிரதிநிதிகளும் விரிவாக கலந்துரையாடப்பட்டதாகவும் இவ் விவாதம் குறித்து உறுதியான தீர்மானத்தை எட்டுவதற்கு தேர்தல் சட்டத்தின்படி போதுமான கால அவகாசம் இன்மையால் இதனைக் கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4,8)

## சார்க் மாநாடு நேற்று ஆரம்பம்

(டாக்கா)

தென்னாசியத் தலைவர்களுக்கான சார்க் உச்சி மாநாடு நேற்று பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் ஆரம்பமானது.

இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்கு சென்றடைந்தார். டாக்கா சென்றடைந்த ஜனாதிபதிக்கும் குழுவினருக்கும் பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் முஹமட் மொஷாட் கானினால் சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. பங்களா தேஷ் இராணுவத்தினாலும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமான நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் மோட்டார் வாகன அணிவகுப்பு மரியாதையுடன் டாக்கா ஷெரடன் ஹோட்டலுக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

இந்த ஹோட்டலிலேயே ஏனைய ஆறு தலைவர்களும் தங்கியுள்ளனர். மேற்படி மாநாட்டையொட்டி டாக்கா முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

40 ஆயிரம் இராணுவமும் பொலிஸாரும் வீதிகளில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். கடந்த 34 வருடத்தில் பங்காதேஷில் இதுவரை போடப்பட்டிராத பாதுகாப்பு முதன் முறையாக இடப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் அப்துல் ஹயூம் கூறினார்.

இம் மாநாட்டில் ஜனாதிபதி நேற்று உரையாற்றினார். நேற்றைய நாளானது ஜனாதிபதி 11 வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதியாக பதவியேற்ற முதலாவது நாளாகும்.

அதேவேளை ஜனாதிபதியாக அவர் இறுதியாக சர்வதேசம் முன்னிலையில் உரையாற்றுவதும் நேற்றைய நாளே என்பது குறிப்பிடத்தக்கது. (ச-6)

## புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து வரும் வாக்காளர்களை சோதனையிட வேண்டாம்

### தேர்தல் ஆணையாளர் ஆலோசனை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேசங்களில் இருந்து கொத்தணி வாக்குச்சாவடிகளுக்கு வரும் வாக்காளர்களை சோதனையிட வேண்டாமென தேர்தல் ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேபோல் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வரும் வாக்காளர்களை சோதனைச்சாவடியிலுள்ள பொலிஸாரினைக் கொண்டு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும்படி தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

சந்தேகத்திற்கு இடமான முறையில் காணப்படுபவர்களை விசாரிக்க இராணுவத்தினருக்கு ஏற்கனவே ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சுதந்திரமானதும் ,நேர்மையானதுமான தேர்தலை நடாத்தும் நோக்கில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கு பிரதேச வாக்காளர்களுக்கு சுதந்திரமாக வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டுமென்று மாவட்ட அரசாங்க அதிபர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து கடந்த தேர்தலில் வாக்களிக்க வந்த வாக்காளர்களுக்கு தடை ஏற்படுத்தியதாக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை கருத்திற்கொண்டே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (ச-4)

## சிப்பாய்களைத் தாக்கி ஆயுதங்கள் பறிமுதல்

(வவுனியா)

வவுனியாவில் இரண்டு இராணுவச் சிப்பாய்களை இனந்தெரியாத ஒன்பது பேர் தாக்கிவிட்டு அவர்களிடமிருந்த ரி.56 ரக துப்பாக்கிகள் இரண்டையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் மன்னார் வவுனியா வீதியில் உள்ள கணேசபுரம் இராணுவச் சோதனைச்சாவடிக்கு உணவு எடுத்துச் சென்ற போதே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

உணவு கொண்டு சென்ற போது சிப்பாய்களை (12 ஆம் பக்கம் பார்க்க)

உங்கள் காரியாலயத்தில், உங்கள் வீட்டில், நீங்கள் விரும்பிய இடத்தில்
☆ உலக சுகாதார விதிமுறைகளுக்கமைவான தயாரிப்பு முறை
☆ அதிநவீன தயாரிப்பு சாதனங்கள் மூலமான இரட்டிப்பு சுத்திகரிப்பு
☆ இலங்கை தரநிர்ணய உத்தரவாதம் SLS
☆ உங்கள் வாசல் வரையான இலவச சேவை
மேலதிக விபரங்களுக்கு
SWISS MINERAL
20 லீட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் 210/= மட்டுமே
Head Office
Gbn,posfach
8026 Zurich
Switzerland
Tel+412438259



Factory;
231, Temple Road,
Nallur, Jaffna.
Phone : 222 8122
0773126963

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிறரது நற்செயல்களை அங்கீகரிப்போம் இறைவனின் நல்லாசி நமக்குக் கிடைக்கும்

## பரமபிதா காட்டிய பாதை

ஒவ்வொரு மனிதனும் விழிப் புள்ள மனிதனாக வாழ்கின்ற போது,வெற்றியின் மனிதனாக இருக்கின்றான். அவனை ஏமாற்



றுவது சிரமமான செயலாகும். எப் பொழுதும் இயங்கிக் கொண்டிருப்ப வனும் சோர்வைப் பற்றி அலட்டிக் கொள்ளமாட்டான். ஒளியின் வழி யில் வாழ்பவனும் விழிப்போடும், அறிவுத்திறனோடும் இருப்பான். இருளின் நாட்களோ,அநீதியின் நாட்களோ ஒளியின் மக்களை அணுகமுடியாது.. அவர்களுக்காக இறைவனே போராடுவான். அருளின் பாதுகாப்பும் அரவணைப்பும் அவர்கள் பக்கம் இருக்கும். ஆண்டவரின் நாள் அதாவது இறுதிநாள் அவர்களுக்கு மகிழ்வின் நாட்களாக அமையும். சாவின் பயம் அவர்களை ஆட்கொள்ளமுடியாது. இவ்வாறு ஒளியின் மக்கள் இருப்பார்கள் என்பதை இறை அடியான் பவுல் தமது திருமடல்களில் கூறி வைத்துள்ளார்.குறிப்பாக தெசலோனிக்கேயர் திருமடலில் இவற்றைக் காணலாம்.

### விண்ணரசே இலட்சியம்

இலட்சியத்தில் இருந்து கண்கள் விடுபடும் போது தடைகள் எம்மை பயமுறுத்துகின்றன. கிறிஸ்தவர்களின் இலட்சியம் விண்ணராகிய தாய்நாட்டை சுதந்தரித்துக் கொள்வதுதான். அதற்கு தடயான செயல்களை எல்லாம் கிறிஸ்தவன் களைந்தெறிந்தவனாக வாழவேண்டும். கண்ணியச் செயற்பாடும், திண்ணிய நெஞ்சமும், எண்ணிய காரியத்தை இலட்சியத்தின் பாதையிலே ஆளும் தன்மையும் அநீதிக்கு முகம்கொடுத்து அன்புவாழ்வைக் கட்டியெழுப்ப முன்நிற்பவர்களாகச் சான்று வாழ்வை கிறிஸ்தவன் வாழ வேண்டும். பெற்றுக்கொண்ட திறமைகளையும், கற்றுக்கொண்ட அனுபவங்களையும் சேர்த்து "கடவுளை தன்னுள்ளே வைத்து அவருக்கு கீழ்ப்படியக் கற்றுக்கொண்டவன் பேறுபெற்றவன்" என்று லூயிபாஸ்ரர் கூறுகின்றார்.

### பயனுள்ள விவேகிகளாவோம்

நற்செய்தியில் கூறப்படுவது போல், பயணம் செய்யும் திருச்சபையின் உறுப்பினர்களாக இருக்கும் நாம் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தாலந்துகளை மண்ணிலே புதைத்து வைத்திருந்த அறிவற்ற விவேகமற்றவனை போலல்லாது தமக்கு ஒப்படைக்கப்பட்ட அளவைப் போன்று இருமடங்கு சம்பாதித்துக் கொடுத்து திறமையாளர்கள், விவேகிகள் என்று ஆசிபெற்றுக் கொண்ட பணியாளரைப் போன்று கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் பயனுள்ளவர்களாக வளங்க வேண்டும். இருளின் மக்கள் மத்தியில் ஒளியுள்ளவர்களாக பிரகாசிக்க வேண்டும்.

### மற்றவர்களுக்கு மதிப்பளிப்போம்

"பிறரது மகிழ்ச்சிக்காக பயன் படுத்தப்படும் செல்வமானது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது" என்று ஹெட்வுக் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். இரட்டிப்பான பலன் அளிப்பவர்களையே இறைவனும் பயனுள்ளவர்களாக குறிப்பிடுகின்றார். பிறர் மீது நாம் கொள்ளும் நல்லெண்ணத்தைப் பொறுத்தும் பிறருடைய நற்செயல்களை நாம் அங்கீகரிப்பதைப் பொறுத்துமே எமக்கு நற்பெயரும் அங்கீகாரமும் இறைவனால் அருளப்படும் என்பதை நாம் பலவேளைகளில் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் அதுவே உண்மையானது. நீங்கள் எந்த அளவையால் அளக்கின்றீர்களோ அதே அளவையாலே உங்களுக்கும் அளக்கப்படும். எங்களை அங்கீகரிக்கும்·நாம் பிறரை ஏற்கமறுக்கின்றோம். அவர்களது செயற்பாடுகள் நடத்தைகளில் குறைகள் காண்கின்றோம்.

இறைவன் எல்லோருக்கும் தந்தையானவர். தம் பிள்ளைகளை வெவ்வேறு விதமாக நோக்குவதில்லை எல்லோரையும் அரவணைக்கின்றார். அவரது அரவணைப்பில் இருந்து பிரிந்து செல்பவர்கள் நாம் தான்.

### இறைவனின் குரலை அறிந்துகொள்வோம்

காலங்களும் செயல்களும் இறையாட்சியின் வெளிப்பாடுகளாகும். அழிவுகளும் அபிவிருத்திகளும் இறைவனின் கையசைவின் செயற்பாடுகளேயாகும். ஆண்டவனின் குரலுக்கு செவிமடுக்கின்றவர்கள் இவைகளை அறிந்து கொள்வார்கள். உல்லாச உலகில் உல்லாசப் பிரயாணிகளாக உலவிவராமல் உயிருள்ள இறை பிரசன்னத்தையும் வல்லமையுள்ள இறை வார்த்தைக்கும் எம்மை அர்ப்பணித்து இறை ஆசீர்வாதம் பெற்று வாழ்வோம். □

**அபீர்ராஜன்**


## சிறு விளம்பரம்

### திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல் சகல வித கெமராக்கள் எலக்ரோணி பளாஸ்கள் திருத்துதல் உதாரணமாக ஜெனரேட்டர் வாட்டர்பம் போன்றவற்றின் பாட்ஸ் கையடக்க மாக உள்ள பிளாஸ்டிக் பொருள் உடைவு ஒட்டுதல் போன்றவை விஷேசமாக செய் யப்படும் ரகு போட்டோ டெக்னிக் 301-கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். கன்னாதிட்டி சந்தி சமீபமாக இடம் :மேல்மாடி தொடர்பு சு.நாராயணசாமி. (9968)


### ஆறுமுகநாவலர் குருபூசை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை எதிர் வரும் 24ஆம் திகதி பிற்பகல் 3.0[illegible] மணிக்கு நாவலர் மணிமண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் ரி.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-9)

### புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

(சாவகச்சேரி)

புலமைப்பரிசில் பரீட்சையில் வரணி மகாவித்தியாலயத்தின் 4 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

க.நிஷானி-152,க.திபாகரன்-337, உ.பிரியங்கன்-135, க.வினோபா-126 ஆகியோரே இப் பாடசாலையிலிருந்து சித்தியடைந்த மாணவர்களாவர். (த-108)

# மூதூருக்கு உணவு, எரிபொருட்களை எடுத்துச் செல்ல இராணுவம் கெடுபிடி

## எழிலன் குற்றச்சாட்டு

(மூதூர்)

இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்திலிருந்து முட்டைகள், இறைச்சி மற்றும் எரிபொருள் ஆகியவற்றை மூதூர் கிழக்குப் பிரதேசத்திற்கு கட்டைபறிச்சான் சோதனைச் சாவடியூடாக எடுத்துச் செல்ல பாரிய கெடுபிடிகள் மேற்கொள்ளப்படுவதாக திருமலை மாவட்ட தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சி.எழிலன் மேலும் கூறியுள்ளதாவது,

மூதூர் கிழக்கில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட ஆழ்கடலில் மீனவர்கள் மாலை 6 மணிக்குப் பின்னர் கடற்றொழிலில் ஈடுபட இராணுவம் கெடுபிடிகளை மேற்கொள்கிறது. கடந்த செவ்வாய்க்கிழமை மூதூர் கிழக்குப் பகுதிக்கு உணவு விடுதி ஒன்றின் உரிமையாளர் 200 முட்டைகளை கட்டைபறிச்சான் சாவடியூடாக எடுத்துச்சென்றார். அவரைத் தடுத்து நிறுத்திய இராணுவத்தினர் தேசியத் தலைவரின் பிறந்தநாளுக்கான கேக்குகளைத் தயாரிக்க இந்த முட்டைகள் எடுத்துச் செல்லப் படுகின்றனவா? என்று விசாரணை நடத்தியுள்ளனர்.

இராணுவ ஆக்கி ரமிப்புப் பகுதியிலிருந்து எடுத்து வரப்பட்ட இறைச்சியை பல சோதனைகளுக்குப் பிறகு அனுமதித்த இராணுவத்தினர் முட்டைகளை அனுமதிக்கவில்லை.

மேலும் 150றகும் மேற்பட்ட உழவு இயந்திரங்களை வைத்துள்ள மூதூர் கிழக்குப் பிரதேச விவசாயிகளுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் லீற்றர் டீசல் அனுமதிக்கப்பட்டுள்ளது. கட்டைபறிச்சான் சோதனைச் சாவடியில் தமிழீழ விடுதலைப் பாடல்கள் அடங்கிய இறுவெட்டுக்கள் வைத்திருந்தற்காக தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். தமிழர்களின் அடிப்படை உரிமையை மறுக்கிற நடவடிக்கை இது. இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தடைசெய்யப்படவில்லை.

மீளமைப்பு மற்றும் புனரமைப்பு கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வரும் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைத் தடுக்கும் வகையிலும் இராணுவம செயற்பட்டு வருகிறது என்றும் சி. எழிலன் மேலும் தெரிவித்துள்ளார்.

## இராசி பலன்

**13.11.2005**

**(ஐப்பசி 27, ஞாயிற்றுக்கிழமை)**
**துவாதசி முற்பகல் 10.25மணிவரை**
**ரேவதி பின்னிரவு 2.23 மணி வரை**
**இராகுகாலம்4.37-6.07 மணிவரை**
**சுபநேரம்9.07-10.37 மணிவரை**
**பிரதோச·விரதம்**

| | |
|---|---|
| மேடம் | சயன சுகக்குறைவு, சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், காரிய தாமதம். |
| இடபம் | மாதர் நட்பு, மன மகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| மிதுனம் | பிரபுத்தனம், நன்கொடை, காரியசித்தி, உற்சாகம். |
| கடகம் | எதிர் பாராத செலவு, குடும்பக் கவலை, வயிற்றுக் கோளாறு, கட்டுப்பாடு. |
| சிங்கம் | வாகன பயம், அபகீர்த்தி, முயற்சி தடங்கல், நண்பர்கள் விரோதம். |
| கன்னி | தேக நலன், போசன சுகம், களஸ்திர நன்மை, காரிய அனுகூலம். |
| துலாம் | தடைப்பட்டகாரியம்கைகூடும், பொருள் சேர்க்கை, உறவினர்வருகை, பெருமையடைதல் |
| விருச்சிகம் | காரிய இடையூறு, புத்திரரால் கவலை, சொத்துப்பிணக்கு, உடல் நலக்குறைவு. |
| தனுசு | மனச்சஞ்சலம், பொது விடயம், மாதா சுகம், சுபசெலவு. |
| மகரம் | மனமகிழ்ச்சி, மனோதைரியம், முயற்சி கைகூடும், நல்ல தகவல். |
| கும்பம் | மனோ சங்கடம், பணவிரயம், போசன சுககுறைவு, அதிக செலவு. |
| மீனம் | சயன சுகம், மாதர் நட்பு, தெய்வ சிந்தை, காரிய சித்தி. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**- வளவன்**

# முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு பொ. ஐ. முன்னணியே காரணம்

## பஸீர் சேகுதாவூத்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றகாலத்தில் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கிய பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியே காரணமாக இருந்ததாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான பஸீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.ஏறாவூரில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் திட்டமிட்ட சதி நடவடிக்கைகள் காரணமாகவே முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தூண்டிவிடப்பட்டன.

சமாதான முயற்சிகளை குழப்பியடிப்பதன் மூலம் ஐக்கிய தேசிய முன்னணியையும்,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் மக்கள் மத்தியில் செல்வாக்கு இழக்கச் செய்யும் நோக்கத்துடனே கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மத்தியில் திட்டமிட்ட வகையில் வன்முறைகள் தூண்டிவிடப்பட்டது.

சமாதான காலத்தில் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டபோது நிறைவேற்று அதிகாரத்தையும் முப்படைத் தளபதியென்ற பதவியையும் கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு எவ்விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லையென்றும் அவர் தெரிவித்தார்(த-9)

## நேரடி விவாதத்திற்கான ஏற்பாடுகள்

(கொழும்பு)

பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நடைபெறப்போகும் பகிரங்க விவாதத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இவ் விவாதம் தொடர்பாக நேற்று சந்திப்பொன்று நடைபெற்றது.இச்சந்திப்பில் பிரதம மந்திரி மஹிந்த சார்பில் முன்னாள் பிரதியமைச்சர் அழகப்பெருமாவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த மொறகொடவும் கலந்துகொண்டு விவாதம் தொடர்பாக ஆராய்ந்தனர்.

இவ் விவாதம் தொடர்பாக மேலும் பேச்சுக்கள் நடத்துவதற்கு இரு தரப்பும் இணங்கியிருப்பதாகவும் தெரியவருகின்றது. (ற-8)

# இரட்டைக் கொலை தொடர்பில் குற்றவாளிக்கு மரணதண்டனை

## கண்டி மேல்நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரின் மனைவியையும், மகளையும் கொலை செய்ததாக குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு கண்டி மேல்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன், குற்றவாளிக்கு 10 வருட கடூழியச் சிறைத்தண்டனையும்,5000ரூபா அபராதத்தையும் கண்டி மேல்நீதிமன்ற நீதவான் விதித்துள்ளார்.2005ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதி 2ஆம் இராஜசிங்க மாவத்தையில் அமைந்துள்ள பேராசிரியரின் வீட்டில் இக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

வழக்கு விசாரணையின் வாதப் பிரதிவாதங்களை நீண்டநேரம் அவதானித்த நீதவான் இறுதியில் மரணதண்டனைத் தீர்ப்பினை வழங்கியுள்ளார். (ற-8)

# ஆக்கத்திறன் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் யாழ்.மாநகரசபை முன்பள்ளியின் ஆக்கத்திறன் கண்காட்சி நாளையும் நாளை மறுதினமும் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 4.30 மணி வரை யாழ்.மாநகரசபை முன்பள்ளி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் மற்றும் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு உபதலைவர் எஸ்.சுரேந்திரகுமார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-7)

# ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரித்து தமிழர் தம் ஒற்றுமையை சர்வதேசத்திற்கு புலப்படுத்துவோம்!

## வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூ.ச.ச வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சர்வ வல்லமை படைத்த சகல நிறைவேற்று அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது விடயம் தொடர்பில் அச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில்,

சர்வாதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளால் இவ்வளவு காலமும் தமிழ்மக்கள் பட்ட துன்பங்கள் துயரங்கள் எம்மாத்திரம்? எமது அன்பு உறவுகளே! நன்கு சிந்திக்க வேண்டிய காலத்தில் வாழ்கின்றோம் சரியான முறையில் மக்களாகிய நீங்கள் சிந்திக்கத் தவறுவீர்களானால் உங்கள் ஒவ்வொருவருடைய அழிவிற்கும் நீங்களே வித்திட்டவர்களாவீர்கள்.

இலங்கையில் 5வது ஜனாதிபதியை தெரிவு செய்யும் நாள் எதிர்வரும் நவம்பர் 17ஆகும். இம் முடிவை சர்வதேசம் எதிர்பார்ப்பதாக ஊடகங்கள் கூறுகின்ற போதிலும் நவம்பர் 27இல் எமது தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் உரையையே சர்வதேசம் விழிப்புடன் எதிர்பார்த்து காத்திருக்கிறது.

இதற்கு முன் ஆட்சிசெய்த 4 ஜனாதிபதிகளின் ஆட்சிக் காலத்தில் எமது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அவலங்களை நாம் மீளவும் சிந்தித்துப் பார்க்கும் போது மீண்டுமொரு ஜனாதிபதி எமக்குத் தேவையா? ஜனாதிபதித் தேர்தல் வேண்டாம். இதனை தமிழ்ச் சமூகம் ஒட்டுமொத்தமாக பகிஷ்கரிக்க வேண்டுகின்றோம்.

உறவுகளை இழந்து ஏங்கும் இதயங்கள் எத்தனை? வீடு வாசல்கள் அனைத்தையும் இழந்து நிற்கதியாகி அவலநிலையில் வாழும் குடும்பங்கள் எத்தனை? கை கால்கள் இழந்த நிலையில் ஊனமுற்று வாழும் உறுதிமிக்க உள்ளங்கள் எத்தனை? கணவனைக் கடலிலே இழந்தும் தரையிலே இழந்தும் விதவைக்கோலம் பூண்டிருக்கும் தாய்மை உள்ளங்கள் எத்தனை? தாய் தகப்பனை இழந்து பாசம் என்பது என்னவென்று தெரியாது திகைத்து வாழும் பிஞ்சு உள்ளங்கள் எத்தனை?

கடற்படையின் அடாவடித்தனத்தினால் கடலிலே எமது கடற்றொழிலாளர்களின் கடல் உபகரணங்கள் கடற்படைக்கப் பல்களினால் முட்டிமோதி உடைக்கபபட்ட- அழிக்கப்பட்ட- தொழில் வகை எம் மாத்திரம். கடற்படையின் துப்பாக்கிச் சூட்டினால் இறந்த கடற்றொழிலாளிகளின் எண்ணிக்கை எம் மாத்திரம்.

இவைகளுடன் உழைத்து- உண்டு- உறங்கி- வாழ்ந்த எம்மவர்கள் சொந்த இடங்களையெல்லாம் விட்டு வெறுங்கையுடன் உயிர்தப்பினால் போதும் என்று வேறிடம் தேடிவந்து அகதிகள் என்றபெயருடன் வாழ்ந்து வரும் குடும்பங்களின் எண்ணிக்கை எம்மாத்திரம். இக்குடும்பங்கள் இன்றும் நிற்கதிக்குள்ளாகி வாழும் நிலையில் அவர்களின் சொந்த இடங்களெல்லாம் இராணுவ உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமாக்கப்பட்டு எவரும் உட்செல்ல முடியாத நிலைக்கு உள்ளாகியிருக்கும் இந் நேரத்தில் ஜனாதிபதித்தேர்தல் எமக்கு வேண்டுமா?

சர்வாதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியிலே நடந்த கொடுமைகள் எல்லாவற்றையும் எங்களுடைய மக்கள் எப்படி மறக்க முடியும்! மீண்டும் ஒரு ஜனாதிபதி எமக்கு வேண்டுமா? 1965ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அரசை அமைபபதற்கு தமிழரசுக்கட்சியின் உதவியையும் தயவையும் நாடி நின்றது. அப்போது வந்த டட்லி சேனநாயக்கா பிரதமர் பதவியை ஏற்று மாவட்ட சபை மூலம் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படலாம் என்றும் திருகோணமலை கோணேஸ்வரம் புனித தலமாக பிரகடனப்படுத்தப்படும் என்றும் டட்லி-செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டது. ஈற்றில் அவ் ஒப்பந்தம் கிளித்தெறியப்பட்டது. இதில் தமிழர்களின் நிலை என்னவானது?

1970 ஆண்டு தேர்தலில் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா இடதுசாரிகளை இணைத்து பிரதமராகப் பதவியேற்றார். அப்போதும் தமிழரசுக்கட்சி சார்பில் கூடியளவு பிரதிநிதிகளை தெரிவு செய்து நாடாளு மன்றத்திற்கு அனுப்பி வைத்தனர் 1972 ஆம் ஆண்டு புதிய அரசியல்யாப்பை தயாரித்த போது தமிழர் பிரதிநிதிகள் அதனைப் பகிஷ்கரித்தனர் புதிய அரசியல் அமைபபானது தேசிய அரசுப் போரவை என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இத் தேசிய அரசுப்பேரவை தமிழர்களின் கோரிக்கைகளை நிராகரித்தது.

1977இல் ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் 7 வருட ஆட்சி,முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக்கட்சி 17 வருட தொடர் ஆட்சியை நடாத்தி வந்தது. பாராளுமன்றத்தில் 6 இல் 5 பெரும்பான்மைப் பலத்தை ஐக்கிய தேசியக்கட்சி பெற்றிருந்த காரணத்தால் அரசியலமைப்பில் சிறு மாற்றத்தைக் கொண்டு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதி தேர்தல் நடத்தாமலே முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக 04.02. 1978ஆம் ஆண்டு ஜனாதிபதிப்பதவியை ஏற்றுக்கொண்டார்.

பதவியை ஏற்றுக்கொண்ட ஜே.ஆர். ஜெயவர்த்தனா முதலாவதாக செய்து கொண்ட பெரிய கைங்கரியம் என்னவென்றால் ஸ்ரீமாவோ பண்டாரநயக்காவிற்கு தண்டனை வழங்கி 16.10.1980 இருந்து 7 வருடத்திற்கு குடியியல் உரிமையை இரத்து செய்துள்ளார். இதனால் தொடர்ந்தும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசியலில் தடம்பதிக்க தடைவிதிக்கப் பட்டது. இக்கால கட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சியாகும் வாய்ப்பு ஏற்பட்டது. 1978ல் கொண்டு வரப்பட்ட அரசியல் மாற்றத்தின்படி பௌத்தம் அரச மதமானது விகிதாசார தேர்தல் முறை அங்கீகரிக்கப்பட்டது.

ஒரு தமிழன் எதிர்க்கட்சித் தலைவராக வந்துவிட்டானே என்று எண்ணிய ஜே. ஆர். ஜெயவர்த்தனா 1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்பை எப்படியாவது மாற்றிவிட வேண்டுமென்று எண்ணி விகிதாசாரத் தேர்தல்முறை கொண்டு வரப்பட்டது. இந் நடைமுறையால் தமிழினம் எப்போதும் இந்தத் தேர்தலில் முழுமையான பதவியை அடைந்துவிட முடியாத அளவிற்கு பௌத்த இனவாதக் கொள்கையை கடைப்பிடிக்கும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் கபடநாடகத்தை புரிந்து கொள்ளுங்கள்.

தனது ஆட்சி அதிகாரங்களை நீடிக்கத் தேவையான உத்திகளை கையாளும் சிங்களத் தலைமைகள் தமிழர் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா? இதிலிருந்து ஒன்று புலனாகிறது. தமிழர்களின் வாக்குப்பலம் ஆட்சியாளர்களால் மதிக்கப்பட்டதா?

1988.12.19 அன்று மீண்டும் ஐக்கிய தேசியக் கடசியினூடாக பிறேமதாஸ ஆட்சியதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டார். மிகவும் கூடுதலான வாக்குப் பெற்று வெற்றியீட்டியவர்கள் பிறேமதாஸ இவருடைய காலத்தில் இந்திய இராணுவம் திருப்பியனுப்பப்பட்டு 1990ல் புலிகளுடன் பிறேமதாஸ கொழும்பில் பேச்சுவார்த்தையை மேற்கொண்டார். 1993 மே முதலாம் திகதி பிறேமதாஸ கொழும்பில் கொல்லப்பட்டார்.

1994இல் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தமிழர்களின் பிரச்சினைகளை நான் தீர்த்துக்கொள்வேன் என வாயார உறுதி மொழிகளை அழித்து பதவிக்கு வந்தவர் இறுதியில் தமிழர்களை அழிப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரம் காட்டி செயற்பட்டார். இவரது ஆட்சிக் காலததில் தமிழர் பிரதேசங்களிலே நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சுக்கள்,கடற்படைக் கப்பல்களின் தாக்குதல்கள், இராணுவ முகாம்களிலிருந்து ஏவப்பட்ட செல் குண்டுகளின் தாக்குதல்கள், இராணுவச் சிப்பாய்களின் துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகம் போன்ற இத்தகைய நடவடிக்கைகளினால் நம் தமிழ்மக்கள் சொல்லொணா துன்ப துயரங்களை அடைந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலை எம்மக்கள் ஏற்றுக் கொள்வார்களா?

2002இல் மற்றுமோர் தேர்தல் நடந்தது இத்தேர்தலில் தமிழ் மக்கள் அதிக அக்கறை செலுத்தவில்லை என்பது வாக்கு எண்ணிக்கையிலிருந்து தெரியவருகிறது. எனினும பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புகளின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் போர்நிறுத்த ஒப்பந்தத்தை கைச்சாத்திடடார். ஆனால், இவ் ஒப்பந்தம் சரியான முறையில நடைமுறைப்படுத்தப் படவில்லை பல போராளிகள் இவ் ஒப்பந்த காலத்தில் கடலிலும் தரையிலும் சுட்டுக் கொள்ளப்பட்ட சம்பவங்கள் நடந்தேறியுள்ளது.

2004.12.26 இயற்கையனர்த்தம் ஏற்பட்டு எமது மக்கள் சின்னா பின்னப்பட்டு முகம்களிலே முடங்கியிருந்த பொழுதிலும் சிங்களப்பேரினவாத அரசின் எவ்வித உதவிகளும் கிடைக்கப் பெறவில்லை வெளிநாடுகளிலிருந்து சுனாமிப் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு பல உதவிகள் கிடைக்கப்பெற்றும் அதனைக் கூட சிங்கள அரசு வழங்குவதற்கு தயாராக இல்லை. இவ் உதவிகள் அனைத்தும் சரியான முறையில் கிடைப்பதற்காக பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இன்று பொதுக்கட்டமைப்பின் நிலையென்னா? நீதிமன்றத்தில் முடக்கப்பட்டு கிடக்கையில் போடப்பட்டிருக்கிறது.

இவ்வளவு அட்டூழியங்கள் சிங்களப் பேரினவாத அரசினால் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போது தமிழர்களாகிய எங்களுக்கு ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் ஒன்று வேண்டுமா? எனவே, அன்பு உறவுகளே! இத்தேர்தலில் நாம் வாக்களிப்பதால் எமது மக்களுக்கு நாமே படு குழிதோண்டுவதற்கு உறுதுணையளித்தவர்களாக எமது வரலாற்றில் பதிக்கப் படும்.

ஜனாதிபதித்தேர்தலுக்கு வாக்களிக்கச் செல்ல வேண்டாம். முற்றுமுழுதாக பகிஷ்கரிப்புச் செய்து தமிழர் தம் ஒற்றுமை சர்வ நாடுகளுக்கும் புலப்படுத்துவோம்! வெளிப்படுததுவோம்!!.எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. (ற)




"சார்க்" உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு டாக்காவில் நேற்று முன்தினம் நடந்தது. மாநாடு தொடங்குவதற்கு முன் வெளியுறவு அமைச்சர்களான அகமது (இந்தியா), லியோன்கோ கன்து வாங்சுக் (பூட்டான்), மோர்ஷித் கான் (பங்களாதேஷ்), குர்ஷித் அகமது கசூரி (பாகிஸ்தான்), அனுரா பண்டாரநாயக்க (இலங்கை), ரமேஸ் நாத் பாண்டே (நேபாளம்), அகமது ஷனத் (மாலைதீவு) ஆகியோர் இணைந்து கொடுத்த போஸ்...

## வன்முறைச் சம்பவங்கள் குறித்து இனி அறிவிக்கப்படமாட்டாதாம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது இடம்பெறும் வன் முறைச் சம்பவங்களின் எண்ணிக்கையை அறிவிப்பதில்லை யென்று பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அமைதியைப் பேணும் நோக்குடனேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. வன்முறைகளின் எண்ணிக்கையை அறிவிப்பதன் காரணமாக கட்சிகளுக்கிடையே போட்டித் தன்மை அதிகரித்து வன்முறைகள் பெரிய அளவில் வெடிக்கக் கூடுமென்றும், இதனாலேயே வன்முறைகளின் எண்ணிக்கையை இனி அறிவிப் பதிலலையெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது. இம் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் காரணமாக ஜனாதிபதித் தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் வீழ்ச்சி ஏற்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் பிரசார நடவடிக்கை முடிவுக்கு வரும் நாளை நளளிரவு முதல் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய சுவரொட்டி களை அகற்றும் விசேட நடவடிக்கைகளையும் பொலிஸார் ஆரம்பிக்கவுள்ளதாகவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ற-8)

### பனம் விதைகள் நாட்டல்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் பனை அபிவிருத்திச் சபை பனம் விதை களை குடாநாட்டில் பல இடங்க ளிலும் பனை அபிவிருத்திச் சபை நடுகை செய்துவருகின்றது.

பனம் விதைகள் நடுகைத் திட் டத்தில் வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவகப் பிரதேசங்களில் இருக்கின்ற சமூகமட்ட அமைப்புக் களும் பங்கேற்று வருவதாக சபையின் ஆலோசகரான வீ.ஜீ.தங்க வேல் தெரிவித்துள்ளார். (ற-16)





நேற்று முன்தினம் பொல்ஜியத்தில் ஈபர் நகரில் இடம்பெற்ற முதலாம் உலகப்போரில் உயிரிழந்தோருக்கான நினைவஞ்சலி நிகழ்வில் முதல் முதலாக பொல்ஜியம் வாழ் ஈழத்தமிழர்களும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வுக் காட்சிகளை படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## வாடிக்கையாளரை கவர்வது எப்படி

"எனக்கு அதிர்ஷ்டமே இல்லை சார்! என்றார் ஒருவர் "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன் வியாபாரம் செய்யலாம் என்று ஒரு கடை வைத்தேன். வேண்டப்பட்டவன் கூட என் கடையில் வந்து எதுவும் வாங்கமாட்டேன் என்கிறான். எல்லோரும் அடுத்த கடைக்குத் தான் போகிறார்கள். என்று சொல்லி மிகவும் அலுத்துக்கொண்டார். இதற்குப் போய் அதிர்ஷ்டம் இல்லை என்று சொல்லாதீர்கள் சார்... வாடிக்கையாளரைக் கவர்வது எப்படி என்பது உங்களுக்குத் தெரியவில்லை. அது தான் குறை என்றேன் சார் உங்களுக்குத் தெரிந்தால் அந்த இரகசியத்தை எனக்கும் கொஞ்சம் சொல்லிக் கொடுங்களேன் என்றார்.

சரி...உங்கள் காதை இப்படிக் கொஞ்சம் கொடுங்கள் என்று சொல்லி ஆரம்பித்தேன். கடை வைத்திருப்பவர்கள் எல்லோரும் இதைக் கொஞ்சம் காதில் வாங்கிக் கொள்ளுங்கள்.

எப்போதும் பணத்தைச் சம்பாதிப்பதிலேயே குறியாக இருக்காதீர்கள் ..அதைவிட முக்கியமாக நீங்கள் சம்பாதிக்க வேண்டியது வாடிக்கையாளரின் மன நிறைவு! வருபவர்கள் திருப்தியுடன் போகவேண்டும். அது முக்கியம் அதில் கவனமாக இருக்கவேண்டும். கடைக்கு வரும் ஒருவர் ஏதாவது ஒரு குறை சொல்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதை அலட்சியப் படுத்தக்கூடாது மிகவும் அக் கறையோடு அதைக்காது கொடுத்துக் கேட்கவேண்டும் அப்படியா சார்.. அதை நான் அவசியம் கவனிக்கிறேன் என்று சொல்லவேண்டும்.

ஒருத்தர் வருகிறார் சார்.. நேற்று உங்கள் கடையில் இதை நான் வாங்கிக்கொண்டு போனேன் வீட்டில் இது வேண்டாம் என்கிறார்கள் அதைத்திருப்பிக் கொடுப்பதற்காக வந்திருக்கிறேன் என்று சொல்லித் திருப்பிக்கொடுக்கிறார். உடனே நீங்கள் முகம் சுளிக்கக்கூடாது எரிச்சல் படக்கூடாது வழக்கம் போல நிதானமாக முகமலர்சியோடு அதைத்திருப்பி வாங்கிக் கொள்ளுங்கள் இவ்வளவு ரூபாய்க்கு சாமான் வாங்கினால் இந்த ஸ்பூன் அன்பளிப்பு... இப்படி ஏதாவது கொடுக்கலாம். பண்டிகைக் காலங்களிலும் பொருட்கள் வாங்குபவர்களுக்கு இப்படி ஏதாவது பொருத்தமாக ஒரு அன்பளிப்புக் கொடுக்கலாம். நீங்கள் கொடுப்பது ஒரு சர்வ சாதாரணமான பொருளாக இருந்தாலும். அது வாங்குபவர் மனதில் ஒரு மகிழ்ச்சியை ஏற்படுத்தும். எதுவும் உங்களால் கொடுக்க முடியாவிட்டாலும் உங்கள் முகம் நிறைந்த சிரிப்பையாவது கொடுங்கள் அது போதும்.

உங்கள் கடையில் இல்லாத ஒரு பொருளை வாடிக்கையாளர் வந்து கேட்கிறார். உடனே இல்லை என்று முகத்திலடித்தது போல் சொல்லி விடாதீர்கள். கொஞ்சம் உட்காருங்கள் சார் என்று சொல்லி உங்கள் பணியாளர் யாரையாவது அனுப்பி வெளியிலிருந்து வாங்கிக் கொண்டு வரச் சொல்லி அவரிடம் கொடுங்கள். சிலபேர் உங்கள் கடைக்கு வரும் பொழுது அவர்கள் வீட்டுக்குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு வருகிறார்கள். என்று வையுங்கள் நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால் அந்தக்குழந்தைகளை முதலில் கவனிக்க வேண்டும். அதன் கன்னத்தைக் கிள்ள வேண்டும். அதனுடன் விளையாட வேண்டும். அதற்கு ஏதாவது இனிப்பு பிஸ்கெட் கொடுத்து அதன் கவனத்தைக் கவரவேண்டும். அதன்பின் பெரியவர்களைக்கவரலாம்.

உங்கள் கடையில் வேலை செய்யும் பணியாளர்கள் சுத்தமாக இருக்கவேண்டும். சிரித்த முகம், சுறுசுறுப்பு இவையிரண்டும் அவர்களுக்குத்தேவை. அழுதுவடிந்து கொண்டிருக்கக் கூடாது. இன்னொருவிடயம் அதிகமாகப் பொருள் வாங்கும் ஒருவரிடம் அதிக மரியாதையாகவும், குறைவாகப் பொருள் வாங்குபவரிடம் வேறு விதமாகவும் நடந்து கொள்ளக்கூடாது. 5 ரூபாய்க்கு வாங்கினாலும் சரி 5000 ரூபாய்க்கு வாங்கினாலும் சரி அவர்களிடம் நீங்கள் காட்டும் மரியாதையில் வித்தியாசம் இருக்கக்கூடாது.

எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் கடையில் ஒரு பொருள் வாங்கினால்... அது உண்மையானதாக இருக்கும். தரமுள்ளதாக இருக்கும் என்ற நினைப்பு மக்களுக்கு வரவேண்டும் அதனால் தரமான பொருளையே நீங்கள் உங்கள் கடையில் வைத்திருக்க வேண்டும்.

இதுவரை நான் சொன்னதையெல்லாம் கவனத்தில் வைத்துக்கொண்டு நீங்கள் கடையை ஆரம்பியுங்கள். வியாபாரம் பிய்த்துக்கொண்டு போகாவிட்டால் என்னிடம் கேளுங்கள். இந்த யோசனைகளில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய விடயம் ஒன்று உண்டு. அது என்னவென்று தெரிந்து கொள்ளவேண்டுமென்றால் இதைக்கேளுங்கள்.

எனது நண்பர் ஒருவர் வந்தார். சார் உங்கள் யோசனையைக் கேட்டதனால் நான் ஒரு அறைவாங்கியதுதான் மிச்சம் என்றார். "என்னவாயிற்று?" என்று கேட்டேன்.

எங்கள் கடைக்கு ஒரு அம்மா குழந்தையைத் தூக்கிக் கொணடுவந்தார்கள் சார்... உங்கள் யோசனைப்படி அந்தக் குழந்தையின் கன்னத்தைக் கிள்ள வேண்டும் என்று முயற்சி செய்தேன். திடீரென்று அந்தக் குழந்தை தலையைக் குனிந்து கொண்டது. என் கை குழந்தையின் கன்னத்திற்குப் பதிலாக குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்தவரின் கன்னத்தைக் கிள்ளிவிட்டது சார்! அது தான் இப்படி ஆகிவிட்டது என்றார். கன்னத்தைத் தடவிக்கொண்டே.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# வட-கிழக்கில் வன்முறை அதிகரிப்பு சிறுவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல்!

### "யுனிசெப்" தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு -கிழக்குப் பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமையின் காரணமாக சிறுவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் தெரிவித்துள்ளது.

2002ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டபோதும் பொது மக்கள் வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

. இந்த வன்முறைச் சம்பவங்களினால் சிறுவர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, அனைத்துத் தரப்பினரும் சிறுவர்களின் உரிமைகளை மதிப்பதுடன் அவர்களது பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் போர்நிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டபோதும் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடிய சூழலை வன்முறைச் சம்பவங்கள் தோற்றுவித்துள்ளன.

வடக்கு கிழக்கில் மட்டுமல்லாமல் இலங்கையின் பல பாகங்களிலும் வன்முறை நடைபெறுகின்றன. இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் வன்முறைச்சம்பவங்கள் பாதிப்பை தோற்றுவித்துள்ளது எனவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது. (ற-8)

### ஐ.தே.கவுடன் இணைவாரா?

# ஜயந்த தனபாலவுடன் ஐ.தே.க பேச்சு

(கொழும்பு)

சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகிய ஜயந்த தனபாலவுடன் ஐக்கிய தேசியக்கட்சி பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகிறது.

சுதந்திரக் கட்சியினது கொள்கைகளுக்கமைய சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜயந்த தனபால தீவிரமாக முயற்சிகளை மேற்கொண்டார்.

ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்ற பெயரில் சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்திருந்த ஜே.வி.பிபோன்ற அடிப்படை வாதிகளினால் அவரது முயற்சி வெற்றியளிக்கவில்லை.

ஒஸ்லோ மற்றும் டோக்கியோ பிரகடனங்களை ஏற்றுக்கொண்டவர் ஜயந்த தனபால எதிர் காலத்தில் ஜயந்த தனபாலவின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு எவ்விதத் தடையும் இல்லை என கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அவரது மகத்தான சேவையை பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் தவறிவிட்டாலும் நாம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அவருக்கு நாம் மதிப்பளிப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-4)

# கூடுதல் கொடுப்பனவு வழங்கக் கோரி நீதிமன்ற பாதுகாப்புப் பிரிவினர் வழக்கு

(கொழும்பு)

பாதுகாப்பு பிரிவு மற்றும் விசேட அதிரடிப் படையினருக்கு கூடுதலாக வழங்கப்படும் அனைத்து கொடுப்பனவுகளையும் தங்களுக்கும் வழங்குமாறு நீதிமன்ற பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

கொழும்பு உயர் நீதிமன்றில் 70 நீதிமன்ற பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் இது தொடர்பாக அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பாதாள உலகக் குழுவினரால் நீதிபதி சரத் அம்பே பிட்டிய படுகொலை செய்யப்பட்டதையடுத்து நீதிமன்ற பாதுகாப்புப் பிரிவு 2004-11.20ஆம் திகதி நியமிக்கப்பட்டது.இதில் பாதுகாப்பு வீரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் களுத்துறை விசேட அதிரடிப் படை பயிற்சி நிலையத்தில் ஒரு மாத காலம் முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

உயர் நீதிமன், மேல் நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதமன்ற நீதிபதிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதே நீதிமன்ற பாதுகாப்புப் பிரிவினரின் கடமையாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

### 25 வயதிற்குட்பட்டோர்

# மது அருந்தினால் - சந்திகளில் கூடினால் அந்தந்த இடங்களில் வைத்தே தண்டனை!

### சங்கிலியன் படை எச்சரிக்கை

(திருநெல்வேலி)

படையினருடன் தொடர்புகளை பேணுவோர் மீது எதிர்வரும் காலங்களில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என "சங்கிலியன் படை" எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழரின் கலாசாரத்தைச் சீரழிக்கும் விதத்தில் இடம்பெறும் எந்தவொரு செயற்பாட்டையும் அனுமதிக்க முடியாது என விழித்து இவ் எச்சரிக்கைப் பிரசுரங்கள் எழுதப்பட்டுள்ளன. "சங்கிலியன்படை" யின் இப் பிரசுரங்களில், 25 வயதுக்குட்பட்டோர் மது அருந்துதல், சந்திகளில் கூடுதல் என்பன முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையினை மீறிபாடசாலை செல்லும் மாணவர்கள் மது பானச்சாலைகளில் , விடுதிகளில் காணப்பட்டால் அந்த இடத்தில் வைத்தே தண்டனை வழங்கப்படும் எனவும் இவ்விடயத்தில் பெற்றோரும் விழிப்பாக இருக்கவேண்டுமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ற-43)

## தமிழீழ கடற்படை துணைப்படையின் 5-வது அணிக்கான ஆயுதப்பயிற்சி ஆரம்பம்

(திருநெல்வேலி)

தமிழீழக் கடற்படையின் கங்கை அமரன் பயிற்சிப் பாசறையின் தமிழீழக் கடற்படையின் துணைப்படையின் ஐந்தாவது அணிக்கான ஆயுதப் பயிற்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்களே தமிழீழக் கடற்படையின் கங்கை அமரன் பயிற்சிப்பாசறையில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இந்த வகையில் 1990ஆம் ஆண்டு தங்களது சொந்த இடங்களை விட்டு படையினரால் வெளியேற்றப்பட்ட வலிகாமம், பலாலிப்பகுதிகளைச் சேர்ந்த மக்களே தமிழீழக் கடற்படையின் துணைப் படையின் ஆயுதப் பயிற்சியை வட மராட்சிக்கிழக்குப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் பெற்றுவருகின்றனர்.

சுமார் 150 பேர் இங்கு பயற்சி பெற்று வருகின்றனர். தமது சொந்த ஊரை மீட்கும் நோக்குடன் தாம் இந்தப் பயிற்சியை பெறுவதாக இவர்கள் தெரிவித்துள்ளனர். (ற-43)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதியினருக்கு தையல் இயந்திரங்கள்

### யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் நடவடிக்கை

(திருநெல்வேலி)

யாழ். மாவட்ட ஊடகவியலாளரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் யாழ். மாவட்ட ஊடாகவியலாளர் சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளையும் "மைக்றோசெற்" கருவிகளையும் வழங்கவுள்ளது.

மாமனிதர் தராக்கி சிவராமின் ஞாபகார்த்தமாக தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி மக்களுக்கு யாழ். மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் தையல் இயந்திரங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துவருவதாக ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே.தவச்செல்வன் தெரிவித்தார்.

இதைவிடச் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு உதவுமாறும் பல அமைப்புகளிடம் இச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.(ற-43)

# விழிப்பின் பதிவுகள்

வலம்புரி

YA TV



## ஜனாதிபதி தேர்தலில்
# தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனரா ?

தமிழ் மக்களிடையே இம்முறை தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கி வருவதை காணக் கூடியதாகவுள்ளது. குறிப்பாக வடகிழக்கில் இவ்விதமான கருத்து வலுப்பெற்று வருவதை காணக்கூடியதாகவுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்காலத்தில் போர்நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டதைத் தவிர வேறு எதுவும் நிகழ்ந்துவிடவில்லை என அவர்கள் கருதுகின்றனர். சமாதானத்தை முன்வைத்து ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தையை இழுத்து சென்றதுடன் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அமெரிக்காவில் இடம்பெற அனுமதி அளித்ததன் மூலம் புலிகள் பேச்சுக்களில் இருந்து பின்வாங்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தனர். அத்தோடு போரினால் பாதிக்கப்பட்ட வடகிழக்கை கட்டியெழுப்ப ஏற்படுத்தப்பட்ட சிரான் அமைப்பை உண்மையில் இயங்க வைக்க எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என்பதே அவர்களது கருத்தாக இருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க ஜே.ஆர். ஜயவர்தனவைப்போன்ற பிரச்சினைகளை இழுத்தடிப்பதன் மூலம், காலந்தாழ்த்துவதன் மூலம் அவற்றுக்கு தீர்வு தராமல் திசை திருப்புவதில் கில்லாடி என தமிழ் ஊடகங்கள் விமர்சிக்கின்றன.

உதாரணமாக, நடைபெற்ற பேச்சுகளை எடுத்துக்கொண்டால் முடிவுக்கு வராமல் பார்த்துக் கொண்டதுடன் புலிகளையும் சர்வதேச வலையினுள்ளில் சிக்கவைத்ததை குறித்து அக்கட்சி பெருமை பேசுகின்றமையையும் காணக்கூடியதாகவுள்ளது.

பேச்சுக்களை இயன்ற மட்டும் காலந்தாழ்த்தி பிரச்சினைகளுக்கு தீர்வைத்தராமல் வேறு பிரச்சினைகளை உருவாக்கி இவை தொடர்பாகவும் பேச்சு... மீண்டும் பேச்சு... என தொடர்கின்ற செயலால் பிரச்சனைக்கு இறுதி வரையில் தீர்வு கிடைக்காது. போரும் ஏற்படாது. இதற்கிடையே புலிகள் இயக்கமும் தனது கட்டமைப்பை இழந்து விடும். அதன் பின்னர் ஏதாவது ஒரு தீர்வை திணிக்கலாம் என்பதே ரணிலின் எண்ணம் என சிலர் விமர்சிக்கின்றனர்.

அமெரிக்கா, இந்தியா , பிரிட்டன் போன்ற புலிகள் மீது கடும்போக்கு கொண்ட நாடுகளை இனப்பிரச்சினையில் தலையிட வைப்பதன் மூலம் தமிழருக்கு நியாயமான தீர்வினை வழங்காமல் விடலாம் என்பதே ரணிலின் எண்ணம் என அவர்கள் தெரிவிக்கின்றனர். அதேபோல புலிகள் இவற்றை ஏற்காது விட்டால் அமெரிக்கா, இந்தியா போன்ற புலிவிரோத நாடுகளின் இராணுவ பலத்தினை உபயோகித்து அந்த அமைப்பினை பலவீனப்படுத்தியே அழித்து விடலாம் என்பதே அக்கட்சியின் எண்ணமாக இருக்கிறது என அவர்கள் மேலும் கூறுகின்றனர். இவ்வாறான விமர்சனங்களை உறுதிப்படுத்துவது போல கடந்த 3ம் திகதி வியாழனன்று கினிஹதென்னவில் இடம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி கூட்டத்தில் உரையாற்றிய நவின் திசாநாக்க விடுதலைப்புலிகளின் கருணா பிளவினை ஏற்படுத்தியவர் ரணில் எனவும் மீண்டும் ஒரு போருக்கு புலிகள் சென்றால் இந்திய, அமெரிக்க இராணுவம் உதவும் எனவும் கருத்துதெரிவித்துள்ளார்.

இவ்வாறான கருத்துகளால் வடகிழக்கு தமிழ்மக்களில் பலர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிப்பதன் மூலம் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கையை இழந்துள்ளனர்.

அதேவேளை மஹிந்த ராஜபக்ஷவை எடுத்துக் கொண்டால் அவர் நேரடியாகவே தமிழ் மக்களது உரிமைகளை நிராகரித்துள்ளார். குறிப்பாக ஜேவிபி, ஹெல உறுமயவுடன் மேற்கொண்ட ஒப்பந்தங்கள் மூலம் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைக்காது என்பதை தமிழ் மக்கள் உணர்ந்துள்ளனர்.

– என். ஜீவேந்திரன்

சிங்கள மக்களது மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துகின்ற கருத்தினையே அவரது 'மஹிந்தவின் சிந்தனைகள்' என்ற தேர்தல் வாக்குறுதி வெளிப்படுத்தி நிற்கிறது.

விசேடமாக வடகிழக்கு பிரச்சினையில் மீண்டும் ஒரு போருக்கு தாம் தயாராக இருப்பது போன்ற தொனியில் மஹிந்த, ஜேவிபி, ஹெலஉறுமய போன்ற பேச்சாளர்களும் மேடையில் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர்.

அதேபோல தற்போதுள்ள போர் நிறுத்த உடன்படிக்கையை மாற்றி எழுத வேண்டும் என தொடர்ந்தும் குறிப்பிட்டு வருகின்றன. இதனை விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ள நிலையில் மஹிந்த ஆட்சிக்கு வந்தால் நிலமை மோசமாகும் என்றே பெரும்பாலான தமிழ் மக்கள் கருதுகின்றனர். இவ்வாறு பார்க்கும் போது தமிழ் மக்கள் விசேடமாக வடகிழக்கு தமிழ் மக்கள் இரண்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களிலும் நம்பிக்கை இழந்துள்ள நிலையை காணக்கூடியதாகவுள்ளது. இதன் காரணமாக இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வடகிழக்கில் வாக்களிப்பு மந்தமாக இருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

# அங்கவீனம் சமூகமேம்பாட்டிற்கு தடையல்ல



இலங்கையின் நீண்டகால இனப்பிரச்சினையின் தாக்கங்கள் பற்றி விளக்கும் அல்லது எடுத்துரைக்கும் கலைப்படைப்புகள் ஓரளவு காணப்படுகின்ற போதும், அவற்றுள் இளம் கலைஞர்களின் படைப்புகள் ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுகின்றன. இனப்பிரச்சினை பற்றியும் இவ்வாறான வரலாற்றைக் கொண்ட இனங்களுக்கிடையே ஐக்கியத்தை உருவாக்குதல் குறித்தும் உணர்த்துகின்ற கலைப்படைப்புகளுள் குறிப்பாக இளம் கலைஞர்களின் ஆக்கங்கள் பெரும்பாதிப்புகளை உருவாக்கக்கூடியவை என்பதில் சந்தேகமில்லை. இளம் கலைஞர்களால் உருவாக்கப்படும் ஆக்கங்கள் பெரும்பாலாக இளைஞர் யுவதிகளால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் இளைஞர் யுவதிகள் தடைகளையும் தடங்கல்களையும் தாண்டி நாட்டின் இனப்பிரச்சினை பற்றி, அதனது பாதிப்புகள், பிரதிபலிப்புகள் பற்றி கலையினூடு பேசுவது அரிதானதொன்றாகும். ஷானிகா கல்ஹாரி வடோவிட எனும் இளம் சிங்களக் கவிஞர் இதற்கு சிறந்ததோர் உதாரணமாகும். பல்லாயிரக்கணக்கான இரத்தினச் சுரங்கங்களை தன்வசம் கொண்டுள்ள இரத்தினபுரி மாவட்டத்தின் கிரியல்ல கிராமத்தின் உருப்பெற்றுள்ள ஒரு அரிதான பெண் கவிஞரே இவர். பிறக்கும் போதே கடினமான சவால்களை தன்னுடன் அழைத்து வந்த ஷானிகாவிற்கு தனது வாழ்க்கையின் ஆரம்பகாலம் ஏனைய சிறார்களைப் போன்று இனிதாக அமையவில்லை. பிறப்பிலிருந்து பாரிச வாதத்தையனுபவிக்கும் ஷானிகாவினால் ஏனைய சிறார்களைப் போன்று துள்ளி விளையாடவோ, ஓடி ஆடவோ, முடியவில்லை. ஆரம்பக் கல்வியை வீட்டிலேயே பயின்ற ஷானிகாவின் எழுத்துத்திறமை அவரது 8வது வயதிலேயே வெளிச்சத்திற்கு வந்தது.

அன்று தொடங்கி அவரது எழுத்துத்திறமை பெற்றோரது உதவியுடனும் அவரது விடாமுயற்சியின் காரணமாகவும் நாளடைவில் கவித்திறமையாக மாறி பின்பு படைப்புகளையும் பிரசவித்தன. பேனையை பிடித்து கவிதைகளை எழுதும் வரத்தை கடவுள் கொடுக்காது விட்டபோதும் அதனை சொற்களாக தான் வடிக்க தந்தை அவற்றை குறித்துக் கொள்வதை இவர்கள் பழக்கப்படுத்திக் கொண்டனர். இவரின் கவிதைகள் இலங்கையின் இனப்பிரச்சினை, சமூக விடயங்களை வலியுறுத்துகின்றனவாகவே அமைந்திருந்தன. காலப்போக்கில் வெளி உதவியுடன் இவர் தனது முதல் கவிதைக் கோவையான 'கலியுகவே வசந்தய' அல்லது கலியுகத்தின் வசந்தம் 2000ஆம் ஆண்டு

– ருவனி

வெளிவந்தது. இவ்வெளியீட்டுடன் கலையுலகினுள் பிரவேசித்த ஷானிகா தனது இரண்டாவது கவிதைக் கோவையை 'சினா மல் பிபென்னே கவதாத' என்ற 'சிரிக்கும் மலர்கள் மலர்வது எப்போது' எனும் பெயரில் இவ்வருட செப்டெம்பர் மாதம் 13ம் திகதி பொரளை நகரோதய நிலையத்தில் வெளியிட்டார். போரினால் நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ பாதிக்கப்படாத ஷானிகாவின் படைப்புகள் இலங்கை மக்களை குறிப்பாக இளைஞர்களை மட்டுமன்றி அதிகார வர்க்கத்தையும் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறு தடங்கல்களையும், மிகுந்த கஷ்டங்களையும் தாண்டி ஈடுபாட்டுடன் நாட்டின் நலனைப் பற்றி சிந்திப்பவர்கள் இனங்காணப்படவேண்டும் என்பதோடு மக்கள் அனைவரும் இப்படைப்புக்களின் உள்நோக்கங்களை புரிந்து கொண்டு அதன்படி செயற்பட வேண்டும் என்பதும் காலத்தின் தேவைகளாகும்.

# ஊடக மாற்றீடு காலத்தின் தேவை








கொள்கை அடிப்படையற்ற, பக்கச்சார்பான, வன்முறைகளையும், அநியாயங்களையும் நியாயப்படுத்துகின்ற ஊடகத்துறை ஒரு பக்கமும், மாற்றுக் கருத்துக்களை மதிக்கத் தெரியாத அரசியல் கட்சிகளும், ஆயுதக்குழுக்களின் வன்முறைகள் மறுபக்கமும் என இலங்கையின் ஊடகத்துறை ஒரு முறைகெட்ட பாதையால் வழி நடத்தப்படுகின்றது. நாட்டில் நடக்கின்ற அநியாயங்களை தடுத்து நிறுத்தாது, கண்டும் காணாதது போல் இருந்து வரும் சமூகத்தின் பெரும் பகுதியினரின் மௌனமும், சுயநலமும் இந்த ஊடக வழிகேட்டுக்கு ஒத்துழைத்து வருகின்றது. ஊடகமென்றாலே அது பக்கச்சார்பானதுதான் என இலகுவாக மறுதலித்து பேசும் பாரம்பரியம் எமது நாட்டில் நீண்டகாலமாக நிலைத்து வருகின்றது. இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் பிரச்சார போட்டிகளில் நாட்டின் அரச ஊடகம் உட்பட தனியார் ஊடகங்களும் நடந்து கொள்ளும் முறைகள், அருவருப்பானவையாக தெரிகின்றன. எனினும், இத்தகைய அவல நிலையிலிருந்து ஊடகத்துறையை பாதுகாக்கும் தொடர்ந் தேர்ச்சியான முயற்சிகள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. அந்தவகையில் அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெற்ற ஊடக நிறுவனங்களின் சந்திப்பு குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வாகும். மாற்றுக் கொள்கைக்கான நிலையம் ஏற்பாடு செய்த இந்த ஊடக நிறுவனங்களின் சந்திப்பில் எதிர்காலத்தில் இலங்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஊடகதர்மங்கள் குறித்தும், ஊடகவியலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தியும் ஒரு சாசனம் வெளியிடப்பட்டது. இந்த சாசனம் ஊழியர் ஊடக தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்,சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியம் என்பன கையொப்பமிட்டு வெளி வந்துள்ளது.

இந்த சாசனத்தில் ஊடகமானது, அதன் செய்தி வெளியிடும் முறை எதுவாக இருந்தபோதிலும் அது சுயாதீனமாகவும், சகிப்புத் தன்மை மிக்கதாகவும், கருத்துக்களின் பல்வகைத்தன்மையை பிரதிபலிக்க கூடியதாகவும் இருக்க வேண்டும் என வலியுத்துகின்றது. அதனூடாக ஒவ்வொரு சமூகத்தவரினும் வேறுபட்ட இன, மத, புவியியல் பின்னணிகளை பிரதிபலித்து அந்த சமூகங்களுகு இடையில் பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும் என இந்த சாசனம் தெரிவிக்கிறது.

அதேபோன்று உண்மைகளை அல்லது முறையான தகவல்களை அறிந்து கொள்வதற்கான உரிமை எவ்வித சிக்கல்கள் இல்லாமல் பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் இலங்கையில் ஊடகத்துறை திட்டமிட்ட ஊடகக்கொள்கை ஒன்றியத்தினூடாக கட்டுப்படுத்தப்பட்டு பேணப்படல் வேண்டும் என்ற கருத்தும் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், ஊடகச் சுதந்திரம் தொடர்பாக பல விடயங்கள் இந்த சாசனத்தினூடாக வலியுறுத்தப்பட்டிருந்தமை முக்கியமாகும். அரசியல், கலாசார, சமய, இனத்துவ குறிக்கோள்களுக்காக . ஊடகத்துறை பயன்படுத்தப்படுவதையும், தீவிரவாதத்தையும் வன்முறைகளையும் வளர்க்கும் பிரச்சாரக் கருவியாக பாவிக்கப்படுவதையும் முற்றாக தடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்துகிறது.

மேலும், பணியாற்றுகின்ற ஊடகவியலாளர்களின் தகவல்களை சேகரித்தல், தயார்ப்படுத்தல், செய்திகள் தெரிவு செய்தல், வெளியிடல் என்பவற்றில் பிறசக்திகளின் தலைமீடு, சட்டரீதியாக தடை செய்ய வேண்டும். அரசாங்கத்தின் அல்லது தனியார் ஊடகவியாளர்களின் தனிப்பட்ட நலன்களின் அடிப்படையில், நியாயமற்ற தணிக்கைகள் மேற்கொள்ளப்படுவதையும் தடைசெய்ய வேண்டும். தனியார் ஊடகங்கள் குறித்த விமர்சனங்கள் இந்த சாசனத்தில் இடம்பெற்றிருந்தாலும் குறிப்பாக அரச ஊடகங்களின் செயற்பாடுகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அரச ஊடகங்களானது பொதுமக்கள் சேவை விழுமியங்களை மதித்து அரசியல் தலைமீடுகள் அற்ற முறையில் உருவாக்கப்பட வேண்டும், அதில் சர்வதேச நியமங்களுக்கு ஒத்திசைவான நடைமுறைகள் கடைபிடிக்கப்பட வேண்டும், நெறிமிக்க வெளிப்படையான கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கோட்பாடுகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

– இக்பால் அஜீட்

மேலும், இலங்கையில் சமூகக் கலந்து ரையாடல்களை ஊக்குவிக்கும் வகையிலும், ஊடகத்துரையினர் மீதான வன்முறைகளை கட்டுப்படுத்தி அவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வண்ணம் சட்ட ரீதியான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்ற கருத்தும் இச்சாசனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்கோணங்களில் ஊடகச்சீர்திருத்தம் இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டு புதியதொரு நெறிபிரளாக ஊடக கலாசாரமொன்று இலங்கையில் ஒருவாக்கத்துக்கான முன்மொழிவாக இந்த சாசனம் கருதப்படலாம். எனினும், கோட்பாட்டளவிலான சிந்தனைகளும் புரட்சிகர எண்ணங்களும் இலங்கையில் நடைமுறைக்கு வருவது என்பது சிரமமான காரியமாக இருக்கும். ஊடகத்துறையில் மாத்திரமல்லாமல் பொதுவாக இலங்கையின் எத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதென்றாலும் முதலில் தவறுகள் இடம்பெறுவதற்கும் அதற்கேதுவான சமூகத்தின் மனோநிலைக்கும் காரணமாக அமைந்துள்ள தவறான கொள்கைகள், தத்துவங்கள் என்பன மாற்றப்படவேண்டும். இவ்வாறு சமூகத்தினை நிர்ணயிக்கும் கொள்கையில் ஏற்படுத்தப்படும் மாற்றத்தினால் மாத்திரமே காத்திரமான ஒரு மாற்றத்தினை நாம் எதிர்பார்க்க முடியும். இந்த மாற்றம் சுதந்திர ஊடகத்துறையை மாத்திரமல்லாது இனப்பிரச்சினைக்கான தீர்வினையும் சாத்தியப்படுத்தும்

## இவ்வார விழிப்பில்...

- வாக்குறுதிகளுடன் ஜனாதிபதி வேட்பாளர்கள்
- ஐரோப்பிய ஒன்றியமும் தேர்தல் கண்காணிப்பும்
- ஷானிகாவின் கவிதைத் தொகுப்பு
- ஊடக சீர்திருத்தம்
- சித்திரங்களினூடான உளவளப்படுத்தல்

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# மஜா



திரை விமர்சனம்

திருட்டுத் தொழிலை விட்டுத் திருந்தி வாழ விரும்பும் அண்ணன் – தம்பி எதிர்வரும் சவால்களை எப்படிச் சமாளித்து ஜெயிக்கிறார்கள் என்பதை சொல்லும் கதை.

அறிவுமதி – ஆதி இருவரும் அண்ணன் – தம்பி திருட்டுத் தொழில் நடத்தும் இவர்களுக்குத் தந்தையும் உடந்தை. திருட்டுத் தொழிலை விட்டுவிட்டு திருந்தி வாழ்வதற்காக ஊரை விட்டுப் புறப்படுகிறார்கள். வழியில் ஒரு வீட்டில் தங்கும் சூழ்நிலை.

அந்தக் குடும்பம் சந்திக்கும் பல்வேறு சிக்கல்களுக்கு, அந்த ஊரைச் சேர்ந்த பண்ணயைார் காளிங்கராயன் தான் காரணம் என்பது தெரிகிறது. அவரது மகள் சீதாவும் 'அடாவடி'த்தனத்தில் இறக்குகிறாள். அண்ணன் – தம்பி சேர்ந்து பண்ணையாரை அடக்கி சீதாவை அறிவுமதி மடக்கி வெற்றி பெறுவதை கலகலப்பு, அதிரடி, ஆக்ஷன் கலந்து மஜாவாக சொல்லி இருக்கிறார்கள்.

அறிவுமதியாக விக்ரம். செய்யாத திருட்டுக்காக மணிவண்ணனை பொலிஸார் அடித்து நொறுக்க அவர்களுக்குப் பாடம் சொல்லும் இடத்தில் இருந்து 'மஜா' தொடங்குகிறது. சாதாரண கிராமத்து வாலிபனாக விக்ரம் வருவது யதார்த்தம். 'அந்நியன்' படத்தில் நடித்தது இவரா? என்று கேட்குமளவு தலைகீழாக தன்னை மாற்றியிருக்கிறார்.

அசினுடன் மோதும் முதல் காட்சி தென்றலாக வந்து சூறாவளியாக மாறுகிறது. பண்ணையாரிடம் மோதும் காட்சிகள் பரபரப்பு. பசுபதி,வடிவேலுவுடன் வரும் காட்சிகள் கலகலப்பு. சண்டைக் காட்சிகள் 'அதிரடி' மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓட, பசுபதி புதைகுழியில் தவிக்க, விக்ரம் வில்லன்களிடம் மோதும் இடம் 'திரில்' கலந்த அதிரடி.

அசினுக்கு 'திடீர்' தாலி கட்டுமிடம் திருப்பம். அப்பாவித்தனம், ஆவேசம், மிரட்டல், யதார்த்தம் எனப்பல பரிமாணத்தில் பட்டைத் தீட்டப்பட்ட வைரமாக ஜொலிக்கிறார் விக்ரம்.

விக்ரமை மிரட்டும் பண்ணையார் மகளாக அசின். அசத்துகிறார். மனதுக்குள் காதலை வைத்துக் கொண்டு அட்டகாசம் செய்வது அசினின் தனித்திறமை. கிராமத்து எழில் தேவதையாக வந்து சொக்க வைத்திருக்கிறார். வரும் ஒவ்வொரு காட்சியிலும் ரசிகர்களை கொள்ளையடிக்கிறார்.

விக்ரம் தம்பியாக பசுபதி அவர் காதலிப்பதும் அதற்காக அப்பாவிடமும் தம்பியிடமும் மோதிக் கொள்வதும் கலகலப்பு. அடிதடிக்குப் பசுபதி என்பதை மாற்றி புதுப் பட்டம் கொடுத்திருக்கிறார்கள். விக்ரம் பசுபதிக்கு அப்பாவாக வரும் மணிவண்ணன் பல வண்ணங்களில் நடிப்பைக் காட்டி அட்டகாசப்படுத்துகிறார்.

வடிவேலு புலிபாண்டியாக வந்து சிரிப்பு உலகில் தான் புலி என்பதை மீண்டும் நிரூபித்து இருக்கிறார். கடாமீசையுடன் அவர் வந்து செய்யும் கலாட்டாக்கள் நினைத்து நினைத்து சிரிக்கக்கூடியவை. விக்ரம், மணிவண்ணன் பசுபதி கூட்டணி அடிக்கும் லூட்டி செமரகளை.

விஜயகுமார் வழக்கம் போல குணச்சித்திரத்தைப் பிழிந்திருக்கிறார். இளவரசு, முரளி, அபுசலீம், பிஜு மேனன் இவர்களுடன் ஒரு பாடலுக்குச் சிந்து துலானியும் உண்டு. எல்லோருமே 'மஜா' கொண்டாட்டத்துக்கு மனப்பூர்வமாக ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

இயக்கம் ஷாப்பி மலையாள இயக்குனர். மலையாளத்தில் உள்ள மூலக்கதையை அந்த சாயலே தெரியாமல் விக்ரமுக்குப் பொருத்தமான தமிழ் படமாக்கி சாதனை படைத்திருக்கிறார். கிராமத்துக் கதை என்றாலும் நகைச்சுவை அக்ஷன் என்று விறுவிறுப்பைக் கலந்து தடைப்படாமல் கதை சொல்லி இருக்கிறார். தமிழ்ப் பட உலகிலும் நல்ல இடத்தைப் பிடிக்க அஸ்திவாரம் போட்டுள்ளார்.

இசை:வித்யாசாகர் ஒவ்வொரு பாடல்களும் ஒவ்வொரு விதம். ஒளிப்பதிவு: பாலசுப்பிரமணியம். கமராவிலேயே கதை சொல்லி இருக்கிறார் குளுமையாக.

ஒரு சாதாரணக் கதையை அக்ஷன், காதல், காமெடி, கலந்து எப்படி விறுவிறுப்பாகச் சொல்ல முடியும் என்பதற்கு இது ஒரு உதாரணம். விக்ரமின் நடிப்புக்கு 'மஜா' மற்றொரு கோணம்.

***ரசிகர்களுக்கு 'மஜா' கொண்டாட்டம்.***



# பரமசிவனுக்கு... பாதியான அ...



'பரமசிவன்' படத்...
கைதியாகவும்...
மையான பொலி...
நடிக்கிறார்கள். அ...
டனும், பணப் ப...
சமூகவிரோத ...
வரும் சிலரை பி...
ரீதியாக ஒன்று...
தால் அவர் கை...
ப...படுத்த... அ...
க்கிறார் என்பது...
கோலிவுட் வட்...
கின்றன.

ஜெயராம் சி...
நடிக்கிறார். வி...
கலக்குகிறார்.

ஹைதராபாத் பகுதிகளில் படத்தின் காட்சிக...
கப்பட்டு வருகின்றன. பாடல் காட்சிகள் ...
செய்யப்படவுள்ளன.

சூப்பர் ஹிட் 'சந்திரமுகி'க்கு அடுத்த...
படம் என்பதால் படத்துக்குப் பலத்த எதிர்...
ளது. அஜித் திரையுலகுக்கு அறிமுக...
ஸ்லிம்மாக இருந்தாரோ அதேபோல் ...
உடலை பாதியாகக் குறைத்து அழகாய்...

அஜித் நடித்த படங்களிலேயே இந்...
டைய சண்டைக்காட்சிகள் ...ரப்பாக...
அதுவும் அவரது ரசிகர்கள் மத்தியில் ...
ஏற்படுத்தியுள்ளது.

# தயாரிப்பாளர் ஆகிறார் –சிம்ரன்



சிம்ரன் படம் என்றால் தமிழ் ரசிகர்களிடம் தனி எதிர்பார்ப்பு இருந்தகாலம் ஒன்று உண்டு. அவர் திருமணம் செய்துகொண்டு கணவருடன் டெல்லி சென்றார். ஒரு குழந்தைக்கும் தாய் ஆகி விட்டார்.

இந்த இடைவெளியில் நயன்தாரா,அசின், ஸ்ரேயா என்ற பல நடிகைகள் தமிழ்ப்பட உலகில் புகுந்து கலக்கிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலையில் சிம்ரன் மீண்டும் தமிழ்ப்படவுலகில் காலடி எடுத்து வைத்து ஒரு ரவுண்டு வரலாம் என்று முயற்சி செய்தார்.

ஆனால் சிம்ரன் எதிர்பார்ப்புக்கு ஏற்ப தமிழ்ப்பட உலகில் மீண்டும் வரவேற்பு கிடைக்கவில்லை. எனவே சொந்தப்படம் எடுத்து அதில் நடிக்கும் முயற்சியில் சிம்ரன் இறக்கியுள்ளார். இதற்காக கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கதை அம்சம் கொண்ட ஒரு படத்தைத் தயாரிக்க திட்டமிட்டுள்ளார்.

இதில் சிம்ரன் கதாநாயகியாக நடிக்கிறார். இதே படத்தில் சிம்ரனின் கணவர் தீபக்கும் முக்கிய வேடத்தில் நடிப்பார் என்று கூறப்படுகிறது. சிம்ரன் தயாரித்து நடிக்கும் படத்தை தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மொழிகளில் ஒரே நேரத்தில் வெளியிட திட்டமிட்டுள்ளார்.

*சென்னை தி.நகர் பகுதியில் ஒரு பிரமாண்...*
*கட்டுவதற்கு தனுஷ் – ஐஸ்வர்யா ஜோடி...*

* * *

மீராஜாஸ்மின் தீவிர மூகாம்பிகை பக்தை ஆகிவிட்டாராம்.

'ஜெயம்' ரவி நடிக்கும் 'இதயத்திருடன்' படப் பாடல்களை கவிஞர் வைரமுத்து எழுதியுள்ளார். இந்த பாடல்கள் வேறு வேறு சூழ்நிலைகளில் எழுதப்பட்டு இசை அமைக்கப்பட்டுள்ளது.

* * *

'அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது' படத்தில் ஓவியர் அரஸ் வரைந்த 'கார்டூன்' படங்கள் இடம்பெற்றுள்ளன.

* * *

'கூத்தாடி' என்ற படத்தை இயக்கும் டைரக்டர் ஏ.கோபாலன் லண்டனில் வாழும் தமிழர்.


* * *

'பாசக்கிளிகள்' படத்தில் பிரபுவும் முரளியும் அண்ணன் – தம்பிகளாக நடித்து இருக்கிறார்கள்.

* * *

ரமணா மான்சி நடிக்கும் 'எழுதியதாரடி' கதை தலைப்பை போலவே வித்தியாசமான கருவைக் கொண்டது என்கிறார் அதன் இயக்குனர்.

# சீ...



'உயிர்'
ஸ்ரீகாந்த் – ஷம்ருதா...

# ஹீரோ ஆசை...

எந்த ஒரு கரக்டர் கொடுத்தாலும் ச...
செய்வதில் பிரகாஷ் ராஜை யாரும் மிஞ்ச ...

இன்று முன்னணி ஹீரோவாக இரு...
இருந்து ஹீரோவானவர்கள்தான். ஆ...
ஹீரோவுக்கான முகவெட்டு இருந்தும் ...
இல்லை.

இது பற்றி பிரகாஷ்ராஜிடம் கேட்டால் "ஹ...
ரைச் சுற்றி ஒரு ஒளி வட்டம் வந்துவிடும். ...
வதற்காக சிரமப்பட வேண்டும். படம் ஓடாவி...
ஒருவரின் படம் நன்றாக ஓடினால் தூக்க...

ஆனால் எனக்கு எந்தப் பிரச்சினை...
கன் பிரகாஷ்ராஜ் நல்லா பின்னு ராம்பா...
டும். அதற்குத் தகுந்தமாதிரி உள்ள எந்...
ராக இருக்கிறேன்" என்றார்.

## ...னுக்காகப் ...ன அஜித்

'பரமசிவன்' படத்தில் அஜித் சிறைக் கைதியாகவும் பிரகாஷ்ராஜ் நேர் மையான பொலிஸ் அதிகாரியாகவும் நடிக்கிறார்கள். அரசியல் செல்வாக்கு டனும், பணப் பலத்துடனும் நகரில் சமூகவிரோத செயல்களில் ஈடுபட்டு வரும் சிலரை பிரகாஷ்ராஜால் சட்ட ரீதியாக ஒன்றும் செய்ய முடியாத தால் அவர் கைதியான அஜித்தைப் ப...படுத்தி அவர்களை எப்படி அழி க்கிறார் என்பதுதான் கதை என கோலிவுட் வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

ஜெயராம் சி.பி.ஐ. அதிகாரியாக நடிக்கிறார். விவேக் காமெடியில் கலக்குகிறார். சென்னை, ஊட்டி, படத்தின் காட்சிகள் வேகமாக படமாக் ...ல் காட்சிகள் வெளிநாடுகளில் ஷுட்

...மகிக்கு அடுத்ததாக வாசு இயக்கும் ...குப் பலத்த எதிர்பார்ப்பு உருவாகியுள் ...குக்கு அறிமுகமான புதிதில் எப்படி ...ா அதேபோல் இந்தப் படத்திற்காக ...றைத்து அழகாகத் தோன்றுகிறார். ...ளிலேயே இந்தப் படத்தில்தான் அவரு ...ன் ...ரபாக ...மைக்கப்பட்டுள்ளதாம். ...ர்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பை

...யில் ஒரு பிரமாண்ட நட்சத்திர ஹோட்டல் ...ஐஸ்வர்யா ஜோடி திட்டமிட்டுள்ளதாம்.

* * *



## புது மாற்றம்

'சந்திரமுகி' வெற்றிக்குப் பிறகு ஜோதிகா ஒரேயடியாக மாறிவிட் டார். அதிக படங்களில் நடிக்கா மல் கதை நன்றாக இருக்கும் ஒரு சில படங்களில் மட்டுமே நடிப்பது என்று முடிவு செய்து அதைக் கடைப்பிடித்து வருகிறார்.

பொது விழாக்களுக்கு சேலை அணிந்துதான் செல்கிறார். பேச்சை மிகவும் குறைத்துவிட்டார். தமிழ் கற்று வருகிறார். இந்த வருடம் தீபாவளிக்கு ஜோதிகா அவரது ஊழியர்களுக்கு நல்ல உடைக ளும் திருப்தியான அளவு போனஸ் தொகையும் கொடுத்து அசத்தியிருக்கிறார்.

## ஷங்கர் பரிசு

'சிவாஜி' படத்தை இயக்கும் ஷங்கரின் உதவியாளராகப் பணியாற்ற 40 பேரை அழைத்து அதில் 20 பேரைத் தேர்ந் தெடுத்தனர்.

அதில் சிறப்பாக கதை சொல்லி சினிமா நுணுக்கங்களைத் தெரிவித்த 10பேரை இப்போது ஷங்கர் அவரது உதவியா ளராக ஆக்கியிருக்கிறார்.

இந்த 10 பேருக்கும் ஆளுக்கொரு மோட்டார் சைக்கிள் தலா ஒரு 'செல்'போன் கொடுக்கப்பட்டுள்ளது. சிறப்பாக செயல் படும் உதவியாளருக்குப் பரிசு கொடுக்கவும் ஷங்கர் முடிவு செய்துள்ளார். யாருக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறதோ!




'பாசக்கிளிகள்'
பிரபு – [illegible] – நவ்யா நாயர்



மதராஸி'
அர்ஜுன் – வேதிகா

## மின்சாரக் காதல்




'கஜுனி'யின் வெற்றியைத் தொடர்ந்து சூர்யா –ஜோதிகா ஜோடி சேர்ந்து நடிக்கும் படம் 'ஜில் என்று ஒரு காதல்'. இதை சூர்யா வின் சொந்தப்பட நிறுவனம் தயாரிக்கிறது.

'ஜில் என்று ஒரு காதல்' என பெயர் வைத்திருக்கிறீர்களே என்ன 'ஜில்' என்று சூர்யாவிடம் கேட்டால்த

"மின்சாரக் கம்பத்தில் மழை நேரத்தில் கைவைத்தால் 'சுர்' என்று 'ஷாக்' அடிக்குமே அந்த ரக காதல் இது."

சொந்தப் பட நிறுவனத்தில்தான் நமது விருப்பப்படி படம் எடுக்க முடியும். படம் வெளிவரும் போது அது உங்களுக்குப் புரியும் என்கிறார் நமட்டுச் சிரிப்புடன்.



## எம்.ஜி.ஆர் வரலாறு சினிமா ஆகிறது

எம்.ஜி.ஆரின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாகத் தயாரிக்கப்படுகிறது. இதற்கு 'எம்.ஜி.ராம்' என்ற பெயர் சூட் டப்பட்டிருக்கிறது.

எம்.ஜி.ஆரின் வாழ்க்கையில் அவர் சந்தித்த சோதனைகளும், சாதனைகளும் இந்தத் திரைப்படத்தின் கருவாக அமைக்கப் பட்டுள்ளது.

இந்தத் திரைப்படத்தை டி.ஏ.ஆர்ட்.கிரியேஷன்ஸ் என்ற திரைப்பட நிறுவனம் மிகவும் பிரமாண்டமான முறையில் தயா ரிக்கத் திட்டமிட்டுள்ளது.

கதை, திரைக்கதை, வசனத்தை செந்தில்குமார் எழுத, செந்தில் குமார் மற்றும் இளைய பாலா இருவரும் இணைந்து இயக்கு கிறார்கள். இந்தத் திரைப்படத்தில் சத்தியம் பேசும் உயர்ந்த நடிகர் கதாநாயகனாக நடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'அறிந்தும் அறியாமலும்' நாயகி சமிக்ஷா 'மெர்க்குரி பூக்கள்' படத்தில் ஸ்ரீகாந்த் – மீரா ஜாஸ்மின் ஜோடியுடன் சேர்ந்து நடிக்கிறார். 2ஆவது கதாநாயகியாக.

## சினிமாச் சிதறல்



...உயிர்'
...ந் – ஷம்ருதா

## காந்தி கனவு

'ஜெயம்' ரவி நடித்து வெளிவந்துள்ள படங்களின் கதைகள் எல்லாமே அனேகமாக ஒரே மாதிரித்தான் இருக்கிறது. என்று குறை கூறப்படுகிறது.

இது பற்றி அவரிடம் கேட்டால் 'மாறுபட்ட கதை அம்சம் கொண்ட படங்களிலும் நான் நடிக்கத் தயார். இனி வித்தியாசமாக நடிப்பேன்' என்கிறார். உங்கள் இலட்சிய வேடம் என்னவென்றால் "காந்தியாக நடிக்க வேண்டும்". என்று சொல்கிறார். மிகப்பெரிய கனவு... பலிக்க வாழ்த்தலாம்.

ஆர்.பி.சவுத்திரியின் மூத்தமகன் ரமேஷ் – அடிதடி – 'அக்ஷன்' படங்களிலும் ஜீவா வித்தியாசமான கதையம்சம் கொண்ட படங்களிலும் நடிக்க முடிவு செய்திருக்கிறார்கள்.

* * *


நடிகர் செந்தில் மகன் கதாநாயகனாக நடிக்கும் 'உன்னெ எனக்குப் புடிச்சிருக்கு' படத்தின் முதல் காட்சியே பிரமாதமாக வந்திருக்கிறதாம்

* * *

கேரள குணச்சித்திர நடிகர் மது நீண்ட இடைவெளிக்குப்பிறகு நரேன் தெய்வ நாயகம் இயக்கும் 'ஒரு பொண்ணு ஒரு பையன்' படத்தில் நடிக்கிறார்.

* * *

புது முகங்கள் நடிக்கும் இது கொஞ்சம் புதுசு படம் ஒரே நேரத்தில் தமிழ், தெலுங்கில் உருவாகிறது.



'வல்லவன்'

## ஆசை இல்லை!

...கொடுத்தாலும் சரி! அதைக் கச்சிதமாகச் ...ஜ யாரும் மிஞ்ச முடியாது.

... ஹீரோவாக இருக்கும் பலர் வில்லனாக ...வர்கள்தான். ஆனால் பிரகாஷ்ராஜுக்கு ...வட்டு இருந்தும் அவர் ஹீரோவாக நடிப்பது

...ஜிடம் கேட்டால் ஹீரோவாக ஆகிவிட்டால் அவ ...ட்டம் வந்துவிடும். பின்னர் அதைக் காப்பாற்று ...ண்டும். படம் ஓடாவிட்டால் அல்லது மற்ற ஹீரோ ...க ஓடினால் தூக்கம் வராது.

...ந்தப் பிரச்சினையும் இல்லை. நான் ஒரு நடி ...லா பின்னு ராம்பா என்று மக்கள் கூற வேண் ...மாதிரி உள்ள எந்த கரக்டரிலும் நடிக்கத் தயா ...ன்றார்.

# விடுதலை விளையத் தொடர்பறாதுழைத்த கணபதி கணேசன்



அன்புயிர் கணபதி கணேசன்! தங்கள் அறிவுமதி பேசுகிறேன்.

அலைவந்து மெழுகிப்போன கரையில் வானம் தவழ்ந்து கிடப்ப தாய் நமது நட்பின் நினைவுகள். நடுநடுவே நண்டுகள் செய்யும் மணற் பூக்களாய் தங்களின் குறும்புகள்.

ஓரக் கடலின் சிரிப்பிற்கும் ஆழக் கடலின் அமைதிக்கும் நடுவே நங்கூரமிட்டிருக்கிறது. இன்றைய ஈழத்தமிழ் உறவுகளின் உளவியல் அழுவதற்கான அத்தனைக் கூறுகளையும் சடக்கென மடக்கி நகைச்சுவையாய்ச் சுழற்றியடிக்கும் இயல்பில் மிக இயல்பாகத் துளிர்க்கிறது உங்களின் நம்பிக்கை.

இதே சூழலில் வெவ்வேறு இடங்களில் மனவியற் சிக்கல்கள் மிகுதியாய் இருக்க... இங்கு மட்டும் அதன் விழுக்காடு குறைவதற்கான ஏது.... நம்பிக்கை சுமந்த நகைச்சுவைதான் என்பதைப் பல்வேறு இடங்களில் பல்வேறு சூழல்களில் உணர்ந்திருக்கிறேன். உங்கள் குறும்புகளும் அதில் சேர்த்தி!.

உண்மையை உணர்ந்த பிறகு மிதக்க முடியுமோ. மிதத்தல் சரியோ, அமிழ்ந்து ஆழம் தேடி மூச்சடக்கித் தாய்மீட்டல் தானே உண்மை முன் நாம் உண்மையாக இருப்பதற்கான தகுதியாகும்.

உண்மையை உணர்ந்த எழுத்து உங்கள் எழுத்து.

ஒவ்வொரு கவிதைக்குள்ளிருந்தும் சொற்களின் அசைவு கதவைக் கண்டுபிடிக்க முடியாத சுவராய் மிரட்டி... கதவே இல்லாத வெளியாய் உள்வாங்கி வெளியேற அனுமதிக்காத கண்ணாடிச் சுவராய் மாறிக்கொள்ளும் தூய களுக்கிடையே பல மாவீரர்கள் எழுந்து நிமிர்ந்து எம்மைப் பார்க்கிறார்கள். சோர்வுகளற்றுத் தொடர்ந்து வருகிறீர்களா எனப் பெருமிதத்துடன் கேட்கிறார்கள்.

**அமரர் கணபதி கணேசனின் மூன்றாம் ஆண்டு நினைவாக அவரது 'குருதி பூத்த வெள்ளரசு' என்ற நூலுக்கு முன்னுரையாய் கவிஞர் அறிவுமதி எழுதிய கடிதம் இங்கே பிரசுரிக்கப்படுகிறது.**

அன்பிற்குரியவர்கள் நீங்கள்.

தூய்மைதான் உங்களின் மூலதனம்.

தலைமையிலிருந்து அனைவருக்குள்ளும் தூய்மை... தூய்மை... தூய்மை!

அச்சம் உடைத்து வெற்றிகள் குவிக்கும் தூய்மை. தன்னலமற்ற தாய்மைகள் செறிந்த விடைகளைத் திறக்கும் தூய்மை.

பல தலைமுறைகளாய் நம்மிடமிருந்து நழுவித் தொலைந்த 'பண்பியல் வாய்மை' மீளக் கிடைத்துவிட்டது. ஆக்கம் படைக்கும் வீரம் தமிழ் மூளைகளில் பற்றிப் படர்ந்து கொண்டிருக்கிறது. அதன் ஒளிப்பாடல்களைத் தாம் ஈகச் சுடர்கள் இடையறாமல் பாடிக்கொண்டிருக்கின்றன.

நோக்கம் நோக்கிய பயணத்தின படகுகளில் துடுப்புகள் தொடாத வாழ்க்கை என்ன வாழக்கை? அவரவர் துடுப்பும் வெள்ளம் மிரள அசைந்துகொண்டுதான் இருக்கின்றன.

எழுதுகோலாய் தங்கள் துடுப்பு!

பாரதியின் வானதியின் கஸ்தூரியின்புதுவையின் காசியின் துடுப்புகளோடுத் துடுப்புகளாயத் தங்கள் எழுதுகோலும்.

இயக்க வளர்ச்சியின் ஒவ்வொரு நிகழ்வுகளிலிருந்தும் கசிந்திருக்கிறது உங்கள் தமிழ். வடுக்களைக் காயங்களாக்கி உள் அழைத்தது வலி சொல்லும் வல்லமை ஒவ்வொரு கவிதைக்குள்ளும்.

ஈழத்தில்...தமிழகத்தில்... மலையகத்தில் என காலம் இட்ட கட்டளைக்கேற்ப மண்பெயரினும் வானம் கிழியாத வாய்மையில் கவிதையாய்... சிறுகதையாய்.... கட்டுரையாய்.... எம் தமிழ்ழ வெற்றிக்கான பரப்புரைச் செயலில் தொடர்பறா உழைப்பை ஊற்றிக்கொண்டிருக்கும் எம் கணபதி கணேசன்! உங்கள் கவிதைகளால் உங்களுக்கு மட்டுமன்று... இனததிற்கும் இயக்கத்திறகும் பெருமை எனும் பயன்பாட்டோடுதான் உங்களைப் பாராட்டுகிறேன. உயிர் ஊற்றும் உறவுகளுக்கிடையே தமிழ் ஊற்றும் பணியாவது நமக்கு வாய்த்ததே என்கிற நிறைவில்... விடுதலை விளைய... விரைவில் விளைய... களப்பணியாய்த் தொடரும் தங்கள கவிதைப் பணி சிறக்க மனமுவந்து வாழ்த்துகிறேன்!

*அன்புடன் தங்கள் அறிவுமதி.*

## கருவறையைச் சாத்து

காலம் காலமாய்த்
தன் இச்சைக்குட் பட்ட
பிச்சைப் பொருளாகவே
கலையையும் பெண்ணையும்
இந்த
ஆண்கள் சமூகம்
பேணி வந்திருக்கிறது!

வாரிசு கொடுக்கவும்
சமைத்துப் போடவும்
படுக்கையைப்
பகிர்ந்து கொள்ளவும்
மட்டுமே நாம்
இவர்களின் தேவை!
மற்ற வகைகளில்
நம்மை இவர்கள்
மனிதப் பிறவிகளாகவே
அங்கீகரித்ததில்லை!

சக்தி என்றும்
பத்தினித் தெய்வம் என்றும்
பிதற்றி விட்டுச்
சலித்துப் போனதும்
'இன்னொரு' வீட்டை
நோக்கிப் பயணம் செய்வர்!

பத்தினித் தெய்வம்
ஆண்களில் உண்டோ?
ஒருவன்
இருப்பதாகக் கதைகள்
பண்ணி
அவனையும்
கடவுள் என்றனர்!

கல்யாணச் சந்தையில்
ஆடத் தெரியுமா?
பாடத் தெரியுமா?
என்று கேட்போர்
வாழத் தெரியுமா
என்று
என்று கேட்பர்?

தற்காலத்தில் இருந்து
கம்பியூட்டர் காலம் வரை
பெண்ணும் கலைகளும்
ஆணின்
ஆளுகைக்குட்பட்ட
அம்சங்களாகவே
இருந்து வந்திருக்கின்றன!

அன்று அரசர்களுக்கு
அந்தப்புரங்கள்
சொந்தமாக இருந்தன!
அரசவிருந்தினரைச்
சந்தோஷப் படுத்தவே
ஆடல்,பாடல்
கலைகளுக்கு–
அரச மான்யங்கள்
அறிவிக்கப்பட்டன!
இன்று அதன் நிறம்
மாறி இருக்கலாம், ஆனால்
பொருள் மாறவே இல்லை!

ஓ! பெண்ணே!
தாலிக்குப் பதிலாய்
கழுத்தில்– சயனட்
குப்பிகளுடன் ஈழ நாட்டில்
தாய்க்குலம்!

ஆசிய நாடுகள் சிலவற்றின்
ஆட்சிப் பீடத்தில்
ஆரணங்குகள்!

என் இனிய சகோதரிகளே!
மலேசியத் திருநாட்டின்
ரபியாக்களையும்
ராஜாமணிகளையும்
நினைவில் கொள்ளுங்கள்!

கனவுகளையும்
கற்பனைகளையும்
கட்டி அழுதது போதும்!
உன்
உரிமைகளைப் பறிக்கின்ற
எவருக்கும் – உன்
கருவறையைச் சாத்து!

படுக்கையை மட்டுமல்ல,
மற்ற
எல்லாவற்றையும்
பகிர்ந்து கொள்!

பெண்ணியம் வாழ
கண்ணியம் காக்கும்
கணவருக்கும் மட்டுமே
உன் கழுத்தை நீட்டு!

சமூகத்தின் கடமையாய்ச்
சுமந்து கொண்டிருக்கும்
சிலுவைகளை இறக்கிவை!
சிறைகளை உடைத்தெறி!
சிறகுகளை விரி!
உலகம் உனது!

–அமரர் கணபதி கணேசன்

### திருட்டு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுருவில் வீதியிலுள்ள தண்ணீர் குழாயின் கைப்பிடியின் மேற்பகுதி கடந்த 8ஆம் திகதி இரவு திருட்டுப் போயுள்ளது. (த-72)

### வேட்டுச் சத்தத்தினால் மக்கள் பெரும் பீதி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கிழக்கு வீதியில் புனித- அந்தோனியார் கோவிலுக்குச் சமீபமாக தினசரி இரவு வேளைகளில் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்பதால் அவ்வூர் மக்கள் பீதியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-72)

### மகளிர் தின விழா

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட மகளிர் தினவிழா எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.பகவான் ஸ்ரீ சததிய சாயி சேவா நிலையத்தில் கொண்டாடப்படவுள்ளது.

நிகழ்வில் கலாநிதி திருமதி மனோன மணி சண்முகதாஸின் சிறபபுச் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது. (த)

### புத்தளத்தில் விபத்து

(புத்தளம்)

புத்தளம் தில்லையடிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பஸ்வண்டியொன்றும், மீன் ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம் பெறறுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தோர் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கபபட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும், பஸ்ஸில் பயணித்த சிலா சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-9)

### சனசமூக நிலையம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது சேதமடைந்த மட்டுவில் வடக்கு முத்துமாரி சனசமூக நிலையம் இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கென சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் எட்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது என நிலையத்தின் தலைவர் தெரிவித்துளளார். (அ-16)

# சர்வதேசத்திடம் சலுகைகளைக் கேட்கவில்லை மறுக்கப்பட்ட உரிமைகளைக் கேட்கின்றோம்

## மாணவர் எழுச்சி மாநாட்டில் பிரகடனம்

தமிழ்த் தேசிய நோக்கிலான இயல்பானதும் சுதந்திரமானதுமான எமது கல்வியானது தன்னாட்சி கொண்ட தமிழர் தாயகத்திலேயே சாத்தியமாகும் என்பதை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதனை அடைவதற்கு தமிழ் மாணவர்களாகிய நாம் ஒன்று திரண்டு செயறபடுவோம்.

இவ்வாறு நேற்று முன்தினம் காலை யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற மாணவர் எழுச்சி மாநாட்டில் தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்ட பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உலகத்திலேயே மிக விலை மதிக்க முடியாத பெரும் செல்வம் கல்வியாகும். எமது தேசமும் இதற்கு விதிவிலக்கு அல்ல. காலம் காலமாக எத்தனையோ உலகப் புகழ்பெற்ற கல்விமான்களை உருவாககிய இறும்பூது எமது தேசத்திற்கு உண்டு. தமிழன் எவனுக்கும் தலைகுனிந்தவன் அல்ல என்று இறுமாப்புடன் சொல்வதறகு கல்வியும் ஒரு காரணமாய் இருந்தது. எமது இனத்தின் உயிர்மூசசு கலவியாகும். ஆனால், சிங்களப் பேரினவாத அரசோ காலாதிகாலமாக எமது மாணவர்களின் கல்வி உரிமைகளினை மழுங்கடிக்கும் வகையில் சமத்துவமற்றதொரு அரசியல் நடைமுறையினைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது.

1970இற்கு முற்பட்ட காலப்பகுதிகளில தனிச் சிங்களச் சட்டம், சிங்கள சிறி(ஸ்ரீ) நடைமுறை என மொழி ரீதியாக பாரபட்சங்களைக் காடடிவந்த சிங்களத் தலைவர்கள் எதற்கும் அசரும் நிலையில இருந்த தமிழ்த் தலைவர்களைத் தமது ஆசைவார்த்தைகளுக்குள் அகப்படச் செய்து அரசியல் நடத்திப் பிழைத்தனர். அடுத்துவந்த காலப்பகுதியில் ஆட்சிக்கு வந்த பேரினவாத அரசாங்கங்கள் எமது இனத்தினை நலிவடையச் செய்யும் முதற்படியாகத் தமிழ் மாணவர்களின் கல்வியின் மீது, கடுமையான போக்கினைக் கடைப்பிடிக்கத் தொடங்கியது. இதன் ஒரு அங்கமாகக் கல்வித் தரப்படுத்தல முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

அதுவரை காலமும் தமிழ் மாணவாகளுக்கு வெகுவாகக் கிடைத்து வந்த பல்கலைக்கழக அனுமதிகள் இதன்மூலம் மட்டுப் படுத்தப்பட்டன. சிங்கள அரசின் இருட்டடிப்பான இச்செயலினால் பாதிப்படைந்த பல தமிழ் இளைஞர், யுவதிகள் தமது இனத்தின் எதிகால நன்மைக்காக போராட்டங்களை முன்னெடுக்கத் தலைப்பட்டனர். இதன இறுதிவடிவமே இன்றைய எமது இனவிடுதலைப் போராட்டமாகும்.

இரண்டு தசாப்தத்திற்கும் மேற்பட்ட எமது இனவிடுதலைப் போராடடத்திலே தமிழ் மக்கள் பல்வேறு சொல்லொணாத் துயர்களினை அனுபவித்திருக்கின்றார்கள். யுததம் என்ற போர்வையில் சிங்கள இராணுவமானது பல்வேறு பாடசாலைகளினைக் குண்டுவீச்சினால் தரைமட்டமாக்கியது. இதனால் மாணவர்கள் குடில்களுக்குள் கல்வி கற்கும் நிலைக்குத தள்ளப்பட்டார்கள். இன்றும் கூட எமது தாயகத்தின் பல்வேறு பிரதேசங்களில் இந்த நிலைமையே காணப்படுகின்றது.

இதுதவிர, உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமிழர் தாயகத்தின் முக்கிய சில பகுதிகள் சிங்கள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இப் பாதுகாப்பு வலயத்தினுள் பல பாடசாலைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இங்கு கல்வியினைத் தொடர்ந்த மாணவர்கள் இன்று முகாம்களில் தங்கியிருந்து பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில தமது நடவடிக்கைகளினைத் தொடர்கின்றனர். அவர்கள் என்று தமது சொந்த நிலத்திற்குச் சென்று காறறைச் சுவாசிக்கப் போகின்றாாகள்?

*சிங்கள இராணுவமும் அரசும் தமிழர் தாயகப் பிரதேசத்தில் யுத்த பீதியைத் திட்டமிட்டு உருவாக்கி இயல்பான கற்றல் நடவடிக்கைகளுக்கு ஊறுவிளைவித்து வருதல.

*தமிழ் பாடநூல்களை பொருத்தமற்ற முறையில் உருவாக்குவதுடன் உரிய காலத்தில் பாடநூல்களை தமிழ் மாணவர்களுக்கு வழங்காது இழுத்தடித்து மாணவர்களின் கல்வியடைவில் வீழச்சியை ஏற்படுத்தல்.

*தமிழ்ப் பாடசாலைகளுக்குத் தேவையான பௌதிக வளங்களையும கற்றல் கற்பித்தல் சாதனங்களையும் போதியளவு வழங்காது புறக்கணித்து வருதல்.

*போதைப்பொருட்கள், நீலப்படம போன்றவற்றை திட்டமிட்டு மாணவர்களிடையே விநியோகிப்பதன மூலம் பண்பாட்டு சீரழிவுகளை ஏற்படுத்தல்.

*போக்குவரத்து வசதியின்மைகள், தடங்கல்களை ஏற்படுத்துவதன் மூலம் மாணவர்களுக்கு மரணத்தை ஏற்படுத்தல்.

*கல்லூரி அதிபர்களைக் கொலை செய்தல், மாணவாகளைக் கைது செய்தல் போன்றவற்றின் மூலம பதறற சூழ்நிலையைத் தோற்றுவித்து கல்விச் செயற்பாடுகளை முடக்குதல்.

*பொருத்தமற்ற கல்விக் கொள்கைகள், நடைமுறைகள் காரணமாக மாணவர்கள் விரக்தியடையும் நிலைக்குத் தள்ளப்படுதல்.

*ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் வாழ்க்கையும் கல்வியும் புனரமைக்கப்படுவதற்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் அரசு எடுக்காததுடன பொதுக்கட்டமைப்பையும் முடக்கி வைத்திருத்தல்.

*போதியளவு ஆசிரியர் நியமிககபபடாமை. 10000 சிங்கள ஆசிரியர்கள மேலதிகமாக உள்ள அதே வேளை, 6000ற்கு மேற்படட தமிழ் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர்.

*அதிபர்கள் கல்வி நிர்வாகிகள் ஆகியோர் உரியமுறையில் நியமனம் செய்யப்படாது கலவி நிர்வாக நடவடிக்கைகளை பலவனம் அடையச் செய்வதன் மூலம தமிழர் கல்வியைப் பாழடித்தல்.

இந்நிலையில் தமிழ் மாணவாகளாகிய நாம் ஒன்றுகூடி பின்வரும் பிரகடனத்தை வெளிப்படுத்துகின்றோம.

"பௌத்த சிங்கள பேரினவாதிகளால் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வரும் தமிழ் மக்களது கல்விச் செலவத்தை மறுமலர்ச்சி அடையசசெய்து தமிழர் தாயகத்தின் சமூக பொருளாதார பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்தும் அதே வேளை, சர்வதேச அறிவியல் தொழில்நுட்ப மாற்றங்களுடன் இணைந்து செல்லும் வகையிலான கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல தமிழ் மாணவாகளாகிய நாம் உறுதிபூணுகிறோம்.

தமிழ்த் தேசிய நோக்கிலான இயல்பானதும் சுதந்திரமானதுமான எமது கல்வியானது தன்னாட்சி கொண்ட தமிழர் தாயகத்திலேயே சாத்தியமாகும் என்பதை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதனை அடைவதற்கு தமிழ் மாணவர்களாகிய நாம் ஒன்றுதிரணடு செயற்படுவோம் என்று அம் மாநாடடில் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. (ற-43)

# புயலில் சிக்கி வீழ்ந்து நொருங்கியது ரஷ்ய விமானம்! 10 பேர் பலி!!

(காபூல்)

புயலில் சிக்கி ரஷ்ய விமானம் மலையில் மோதி விபத்திற்குள்ளானதில் அதிலிருந்த 10 பேர் பலியாகியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் மறுசீரமைப்புப் பணிகளுக்காக பல்வேறு நாடுகளிலிருந்து உதவிப்பொருட்கள் தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகின்றன.


இந்த நிலையில் ரஷ்யாவில் இருந்து ஒரு சரக்கு விமானம் புறப்பட்டுச்சென்றது. அந்த சரக்கு விமானத்தில் விமானி, சிப்பந்திகள, ஊழியர்கள் உட்பட 10பேர் இருந்தனர்.

அந்த விமானம் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் அருகே சென்றுகொண்டிருநத போது பயங்கர புயல் வீசியது. பலத்த மழையும் பெய்தது.இதனால் விமானம் தனது கடடுப்பாட்டை இழந்து தாறுமாறாகப் பறந்தது.

சிறிது நேரத்தில் அந்த விமானம் காபூல் அருகே உள்ள மலையில் மோதி நொருங்கி விழுந்தது.

இதில் அந்த விமானத்தில் இருந்த 10 பேரும் பலியாகிவிட்டனர். தகவல் கிடைத்ததும் மீட்புக்குழுவினர் சம்பவ ஒஇடத்திற்கு விரைந்தனர். அந்தப் பகுதியில் உள்ள கிராம மக்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

அந்தப்பகுதி முழுவதும் பனிமூட்டமாக உள்ளதால் மீட்புப் பணியில் முழுமையாக ஈடுபடமுடியவில்லை. இதுவரை 6 உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. (ற)



அழகு மங்கைகளுக்கு நடுவே... 2008 இல் ஒலிம்பிக் போட்டிசீனாவில் உள்ள பீஜிங் நகரில் நடைபெறவுள்ளது. நேற்று அந்த ஒலிம்பிக் சின்னங்கள் (மேஸ்கட்) அறிமுகவிழா கோலாகலமாக நடைபெற்றது. அதில் சீனாவின் அழகு நடன மங்கைகள் பங்கேற்று விழாவுக்கு வந்தவர்களை பரவசப்படுத்தினார்கள்.

# அபு சலீம்-மோனிகா பேடி விளக்கமறியலில்

(ஐதராபாத்)

மும்பையில் கடந்த 1993ஆம் ஆண்டு நடந்த தொடர் குண்டுவெடிப்புக்களை நிகழ்த்தியவன் தாவூத் இப்ராகிம். அவனது நிழலாக செயல்பட்டவன் அபுசலீம்.இதன்பிறகு அவன் காதலி நடிகை மோனிகா பேடியுடன் தபபிவிட்டான்.

போர்சுக்கல் நாட்டில் தஞ்சம புகுந்த அவர்களை அந்த நாட்டுப் பொலிஸார் கைதுசெய்தனர். அவர்களை ஒப்படைக்கும படி இந்திய அரசு கோரிக்கைக்கு இணங்கி நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவர்களை இந்தியாவிடம் ஒப்படைக்க போர்சுக்கல் அரசு முன்வந்தது.

அதன்படி கடந்த வியாழக்கிழமை அவர்களை சி.பி.ஐ. அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். விமானம மூலம் நேற்றுமுன்தினம் மும்பை கொண்டுவரப்பட்டனர். மும்பை தடா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அபுசலீமிடம் நீதிபதி விசாரித்த போது மோனிகா பேடியை தனது மனைவி ஏன்று கூறினான்.அவனை 23 ஆம்திகதி வரை காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். அதன்பிறகு அவன் சிறையில் அடைக்கூப்படடான்.

அபுசலீம் மீது 70க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன. அவற்றை ஒன்றாக விசாரிப்பதா, தனியாக விசாரிப்பதா என்பதுபற்றி நீதித்துறை அதிகாரிகளுடன் மும்பை பொலிஸார் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.


இந்தநிலையில் அபுசலீமுடன மோனிகா பேடியும் நேற்றுமுன்தினம் மும்பை தடா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது மோனிகா மீது ஐதராபாத்தில் பாஸ்போர்ட் மோசடி வழக்கு உள்ளதால் அங்கு கொண்டு செல்ல பொலிஸார் அனுமதி வேண்டினர். நீதிபதி அதற்கு அனுமதித்தார். எதிர்வரும் 14ஆம் திகதி இதே நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். பின்னர் மோனிகாவை ளவிமானம் மூலம் ஐதராபாத் கொண்டு வந் தனர். விமான நிலையத்தில் ஏராளமான பத்திரிகையாளர்கள், டி.வி.கேமிராமேன்கள் சூழ்ந்து நின்றனர். ஆனால் சரக்குகள் இறக்கும் பகுதி வழியாக மோனிகாவை கொண்டு வந்து காரில் ஏற்றி ரகசிய இடத்துக்கு பொலிஸார் அழைத்துச் சென்றனர். அங்கு கூடியிருந்த விசுவ இந்து பரிஷத் தொண்டர்கள் ஆவேசமாக குரல் எழுப்பினர். துரோகியை தூக்கில் போடுங்கள் என்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஐதராபாத்தில் விடியவிடிய விசாரணை நடத்திய சி.பி.ஐ. அதிகாரிகள், நேற்று காலையில் ஐதராபாத் சி.பி.ஐ.தனி நீதி மன்றத்தில் இவரை ஆஜர்படுத்தினர். பின்னர் பேடியை காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த 2001ஆம் ஆண்டு பேடியும் அபுசலீமும சனா மாலிக்-ர்மில் மாலிக் கமல் என்ற பெயரில் போலிப் பெயரில் பாஸ்போர்ட் வாங்கியிருப்பது தான் அவர்கள் மீதுள்ள குற்றச்சாட்டு.

அதேபோல சலீமின் இன்னொரு மனைவி சபீனா ஆஸ்மிக்கும் நேகா ஆசிப் ஜெப்ரி என்ற பெயரில் பாஸ்போர்ட் வாங்கியுள்ளனர்.கர்னூலில் ஒரு வீட்டு முகவரியைக் கொடுத்து இந்தப் பாஸ்போர்ட் வாங்கப் பட்டுள்ளது. இந்த மூன்று பேர் கொடுத்த முகவரியிலும் நேரில் விசாரணை நடத்திய தனிப்பிரிவு அதிகாரி ஒருவர் அந்த முகவரி சரியானதே என்று சான்றிதழ் அளித்துள்ளார்.இப்போது சலீம்-பேடி கைதுசெய்யப்பட்ட பிறகு, பாஸ்போர்ட் அலுவலகத்தில் உள்ள மூன்று அதிகாரிகளையும் கைது செய்தனர். அபுசலீம்-பேடி வெளிநாடு தப்புவதற்கு உதவிபுரிந்ததாக அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ற)





அலங்கார கலனின் நடுவில் உள்ள சிமிழில் புத்தரின் கைவிரல் எலும்பு வைக்கப்பட்டுள்ளது. தென்கொரியா தலைநகர் சியோலில் உள்ள சோஜியே ஆலயத்தில் இது காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளது.டிசம்பர் 20ஆம் திகதி வரை இதைப் பார்க்கலாம். இந்த எலும்பை 9 உலக அதிசயங் களில் ஒன்று என்கிறது யுனெஸ்கோ.

## WORLD NEWS உலக தரிசனம்

## ஜோர்டான் தற்கொலைத் தாக்குதல்

# ஈராக்கியர் உட்பட 120 பேர் கைது

(அம்மான்)

ஜோர்டானில் இடம்பெற்ற தற்கொலைப் படை தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஈராக்கியாகள் உட்பட 120 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஜோர்டான் தலைநகர் அம்மானில் உள்ள மூன்று நட்சத்திர ஹோட்டல்களில் கடந்த வியாழக்கிழமை தற்கொலைப் படை தாக்குதல்களை நடாத்தின. இதில் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் உட்பட சுமார் 50ற்கும் மேற்பட்டோர் பலியாயினர். 300ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு அல்கெய்டா தீவிர வாத அமைப்பினர் பொறுப்பேற்றுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து ஜோர்டானில் பல இடங்களில் மக்கள் போராட்டம் நடத்தினர்.இந்தத் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்ட அல்-சாகாவியை தூக்கிலிட வேண்டுமென்று மக்கள் ஆவேசத்துடன் தெரிவித்தனர்.

இதேவேளை,தாக்குதலில் படுகாயமடைந்த சிரிய நாட்டு பட இயக்குநர் முஸ்தபா அகமட் நேற்றுமுன் தினம் மரணமடைந்தார். இதையடுத்து பலியானவர்களின் எண்ணிக்கை 60ஆக உயர்ந்துள்ளது.

இதனிடையே அம்மான் ஹோட்டல்களில் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிஸார், ஈராக்கியர் மற்றும் ஜோர்டான் நாட்டினர் என 120பேரைக் கைது செய்துள்ளதாகவும் நாடு முழுவதும் ஏராளமானோரை விசாரணைக்காக பிடித்துவைத்துள்ளதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ற)



தண்ணீருக்குள் திருமணம் செய்வது வெளிநாடுகளில் இப்போது பஷனாகிவிட்டது. தண்ணீர் திருமணத்தை ஊக்குவிக்க ஹொங்கொங்கை சேர்ந்த 'ஓசன்பார்க்' நிறுவனம் மொடல்களை வைத்து நேற்று காட்சித்திருமணம் நடத்தியது. ஒரு திருமணத்திற்கு இந் நிறுவனம் வசூலிக்கும் கட்டணம் ரூ.6 இலட்சத்து 40 ஆயிரம்... .

# சூடுபிடிக்கும் குஷ்பு-சுகாசினி விவகாரம்

(சென்னை)

நடிகை குஷ்பு விவகாரம் தொடர்பாக நடிகை சுகாசினி தெரிவித்த கருத்துகளுக்கு தமிழகம் முழுவதும் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இதுதொடர்பில் சுகாசினிக்கு கண்டனம் தெரிவித்துள்ள் நடிகர் சங்கம் விளக்கம் அளிக்கக்கோரி அவருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.இதற்கிடையில் குஷ்புவுக்கு மேட்டூர் குற்றவியல் நீதிமன்றம் பிடிவாரன்ட் பிறப்பித்துள்ளது. அதையடுதது முன் ஜாமன் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் குஷ்பு மனுத்தாக்கல் செய்துள்ளார்.

தமிழகப் பெண்களின் கற்புக் குறித்து நடிகை குஷ்பு கூறிய கருத்துக்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. முதலில் தனது கருத்தில் தவறில்லையென்று கூறிய குஷ்பு கடுமையான கண்டனங்களைத் தொடர்ந்து மன்னிப்புக் கோரினார். தமிழகத்தின் பல பகுதிகளில் குஷ்பு மீது பல்வேறு வழக்குகள தொடரப்பட்டன.அந்தப் பிரச்சினையில் முதலில் நடிகர் சங்கம் தலையிடவில்லை.தமிழ்ப் பண்பாட்டிற்கு எதிராக குஷ்பு கருத்துக் கூறியது தவறு என்றுமுதல்வர் ஜெயலிதாவும் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் சென்னையில் இரு தினங்களுகசு முன்பு நடந்த ஒரு பட விழாவில் பேசிய குஷ்பு,கற்பு குறித்துத் தான் பேசியதில் எந்தத் தவறுமிலலை யென்றும் புரியவேண்டியவர்களுக்குப் புரிந்திருந்தால் பிரச்சினை வந்திருக்காது என்றும் கூறினார்.

அதேவிழாவில் பேசிய நடிகை சுகாசினி, குஷ்புவுக்கு ஆதரவாகப் பேசினார். தமிழர்களுக்கு கொம்பா முளைத்திருக் கிறது என்று கேட்ட சுகாசினி, குஷ்பு பேசியது குறித்து பத்திரிகையாளர்கள் தனனிடம்



கேட்டிருந்தால் கிழித்திருப்பேன் என்றும் கூறினார்.அததுடன் தமிழர்களின் சார்பில் குஷ்புவிடம் மன்னிப்புக் கேட்பதாகவும் சுகாசினி கூறினார்.தான் பேசியதில் தவறில்லையென்று குஷ்பு பேசியதும் அவருக்கு ஆதரவாக சுகாசினி தெரிவித்த கருத்துக்களும் மீண்டும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சுகாசினிக்கு கடுமையான கண்டனம் தெரிவித்து பல்வேறு அமைப்புகளும் பிரமுகர்களும் கருத்துகளை வெளியிட்டிருநதனர். இலட்சக்கணக்கில் இலாப மடைந்த குஷ்பு தமிழகத்தின் பண்பாட்டைச் சிதைப்பதா? என்று திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கமும் கண்டனம் தெரிவித்துள்ளது. அத்துடன், குஷ்பு நடித்து திரைக்கு வரவுள் ஜூன் ஆர், வெற்றிவேல் சக்திவேல் ஆகிய படங்களையும் வாங்கவும் மறுத்துள்ளனர்.

இந்தநிலையில் சுகாசினிக்கு நடிகர் சங்கமும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தென்னிந்திய நடிகர் சங்கப் பொதுச் செயலர் சரத்குமார் நேற்றுமுன்தினம் அறிக்கையொன்றினையும் வெளியிட்டுள்ளார்.(ற)



ராதாகிருஷ்ணன் தாக்கப்பட்ட வழக்கிற்காக நேற்றுமுன் தினம்சென்னை நீதிமன்றில் ஆஜராக வந்த காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்..

# சச்சின் 43

## மீள் பார்வை

என். சொக்கன்

# ஒரு புயலின் கதை



இங்கிலாந்தில் நடைபெற்ற 1999 உலகக் கோப்பைப் போட்டிகளில் இந்திய அணி அரை இறுதிக்குத் தகுதி பெறாமல் "சூப்பர் சிக்ஸ்" நிலையோடு வெளியேறியது அந்தத் தொடரில் அஸாருதீனின் ஆட்டமும் சொல்லிக் கொள்ளும்படி இல்லை என்பதால் அவரை நீக்க வேண்டும் என்கிற கோரிக்கைகள் எழுந்தன. அதிருப்தியாளர்களின் குரலுக்குப் பணிந்த கிரிக்கெட் வாரியம் அடுத்த கேப்டனாக சச்சினைத் தேர்வு செய்ய விரும்பியது.

முதல் முறை சூடுபட்டுவிட்டதால் சச்சினுக்கு மீண்டும் கேப்டன் பதவியை ஏற்கிற எண்ணமே இல்லை என்று சொல்லிவிட முடியாது ஆனால் அணி வீரர்களின் முழு ஒத்துழைப்பு இல்லாத இன்னொரு கசப்பான பயணத்துக்கு அவர் தயாராக இல்லை.

ஆகவே அஸாருதீனுக்கு பதிலாக தன்னை கேப்டனாக நியமிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் திட்டமிட்டிருப்பதை அறிந்ததும் சச்சின் உடனடியாக அவர்களைத் தொடர்பு கொண்டு தன்னுடைய விருப்பமின்மையைத் தெளிவாகச் சொன்னார்.

அப்போது இந்திய தேர்வுக் குழுவின் தலைவராக இருந்த முன்னாள் இந்திய கேப்டன் அஜி வடேகர் சச்சினை அவரது இல்லத்தில் சந்தித்து இது பற்றிப் பேசினார் இந்திய அணியின் எதிர்காலத்தை மனத்தில் கொண்டு இந்த கேப்டன் பதவியை சச்சின் ஏற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை அவர் விளக்கிச் சொல்ல அவருடைய எல்லாவாதங்களுக்கு "எனக்கு அதில் ஆர்வமில்லை" என்பதுதான் சச்சினின் ஒரே பதிலாக இருந்தது.

சச்சினின் மறுப்பை அஜித் வடேகர் ஒப்புக்கொள்ளவில்லை சச்சின் பெரிதும் மதிக்கும் ஆஸ்திரேலிய இமயம் டான் பிராட்மென் ஒரு மிகச் சிறந்த பேட்ஸ்மேனாக மட்டும் இல்லாமல் அற்புதமான கேப்டனாகவும் சாதனைகள் புரிந்ததை எடுத்துச் சொல்லி "நீங்களும் அது போல் வளர வேண்டும் சச்சின்" என்று வற்புறுத்தினார் அவர். இந்த முறை வாரியம் அவருக்கு முழு ஆதரவு கொடுக்கும். அணித்தேர்வில் அவரது விருப்பங்களுக்கும் மதிப்பு தரப்படும் என்பது போன்ற உறுதிமொழிகளையும் கொடுத்தார். அவர் சொல்வதை நம்புவதா, வேண்டாமா என்கிற குழப்பத்திலேயே சச்சின் அவருக்கு விடை கொடுக்க அவருடைய மவுனத்தை சம்மதம் என்று எடுத்துக்கொண்டுவிட்டது கிரிக்கெற் வாரியம்.

1999ஜுலை 28ஆம்திகதி இரண்டாவது முறையாக இந்திய அணியின் தலைவராக சச்சின் நியமிக்கப்பட்டார் மறு நாள் 29ஆம் திகதி மாலை கேப்டன் பதவியை ஏற்றுக்கொள்வதாக சச்சின் அறிவித்தார்.

இப்படியாக சச்சினின் கையில் கேப்டன் பதவியைப் பிடிவாதமாகத் திணித்து அவர் அதை மறுக்க முடியாதபடி ஒரு தர்ம சங்கடத்தை கிரிக்கெட் வாரியம் உருவாக்கி விட்டது. எப்படியோ மீண்டும் கேப்டன் பதவியை சச்சின் ஏற்றுக்கொண்டாகிவிட்டது. முன்பு அவர் தலைமையேற்ற அணிக்கும் இப்போதைய அணிக்கும் முக்கியமான வித்தியாசம்-அணியின் பலமும் நிலைத்தன்மையும் வெகுவாகக் கூடியிருந்தது.



முன்பு "புதிய பையன்" களாக இருந்த திராவிட் மற்றும் கங்குலி தற்கால கிரிக்கெட்டின் குறிப்பிடத்தக்க பேட்ஸ்மென்களாக வளர்ந்திருந்தார்கள். ஸ்ரீநாத், கும்ப்ளே ஆகியோர் போட்டிகளைவென்று தரக் கூடிய சிறந்த பந்து வீச்சாளர்களாக வளர்ந்திருந்தார்கள். அஜித் அகர்கர் போன்ற புதியவர்களும் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஆகவே சென்ற முறை போல சச்சினுக்குப் பெரிய ஏமாற்றங்கள் இருக்காது என்று தான் எல்லோரும் எண்ணினார்கள்.

சச்சின் தலைமையிலான "புதிய" இந்திய அணி இலங்கையிலும் சிங்கப்பூரிலும் இரண்டு முத்தரப்பு ஒரு நாள் போட்டித் தொடர்களில் பங்கேற்று வெறுங்கையோடு திரும்பியது பின்னர் நியூஸிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடரையும் ஒரு நாள் தொடரையும் வென்றது இந்தியா!

இரட்டை வெற்றிகளோடு கேப்டன் சச்சினுக்கு இன்னொரு இரட்டை சந்தோஷம்- டெஸ்ட் போட்டிகளிலும், ஒரு நாள் போட்டிகளிலும் தனது அதிகபட்ச ஸ்கோர்களைக் (217, அவுட் ஆகாமல் 186) குவித்தார். கேப்டன் பதவியால் தனது பேட்டிங் திறமைகள் பாதிக் கப்படவில்லை என்று மீண்டும் ஒரு முறை நிரூபித்தார் சச்சின்.


நியூஸிலாந்து தொடரை அடுத்து, ஆஸ்திரேலியப் பயணம்!

சச்சினின் அதிஷ்டமோ என்னவோ அவர் கேப்டனாகப் பொறுப்பேற்றபோதெல்லாம் கடினமான பயணங்கள் அவரை வரவேற்றன. சென்ற முறை தென் ஆபிரிக்காவிலும், மேற்கிந்தியத் தீவுகளிலும் சிரமப்பட்ட நினைவுகளின் ஈரம் காய்வதற்குள் இப்போது ஆஸ்திரேலியாவுக்கு கிளம்பவேண்டும்.

சச்சின் தலைமையிலான இந்திய அணி ஆஸ்திரேலியாவில் சென்று இறங்கியதும் அந்நாட்டு ரசிகர்கள் அவர்களை ஆவலோடு வரவேற்றார்கள். ஏழு ஆண்டு களுக்குப் பின் சச்சின் விளையாடுவதை மீண்டும் பார்க்கப் போகிற சச்சின் விளையாடுவதை மீண்டும் பார்க்கப் போகிற ஆவலோடு இருந்தார்கள் அவர்கள். ஆஸ்திரேலிய வீரர்களும் 1998 சுற்றுப் பயணத்தின் போது இந்தியாவில் பட்டுக்கொண்ட காயங்களுக்கு எல்லாம் பழி வாங்கத்தயராகிக் கொண்டிருந்தார்கள். இந்திய அணி விளையாடிய மூன்று போட்டிகளில் மொத்தம் 6 முறை பேட்ஸ் செய்த சச்சின், ஒரு அருமையான சதமும், இரண்டு அரைச்சதங்களும் அடித்தார்.

*(தொடரும்)*







அமெரிக்க தமிழ்ச் சங்கத்தின் 28ஆம் ஆண்டு நிறைவு விழா மற்றும் விடுதலைப் பேரொளி, போரும் சமாதானமும் ஆகிய நூல் வெளியீட்டு விழா கடந்த 4,5ஆம் திகதிகளில் ஈழத் தமிழர்கள் அதிகம் வாழும் நியூஜேர்சி மாநிலத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் 'விடுதலைப்பேரொளி' நூல் வெளியீட்டு வைக்கப்படுவதையும் இந்நிகழ்வில் தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சிறப்புரை ஆற்றுவதையும் படங்களில் காணலாம்.

# வினாடி வினாப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் பற்றிய வினாடிவினாப்போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணிக்கு நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் விரும்பிய எவரும் பங்குபற்றலாம். பாடசாலை மாணவர்களுக்கு வேறாகவும், ஏனையோருக்கு வேறாகவும் இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெற்றவருக்கு நாவலர் விருதுக்கேடயம் உட்பட பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டிக்கு எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன் 125, அரசடி வீதி,கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (ரு-9)

# வெளிநாடுகளுக்கு பொதி அனுப்புதல் குறித்த அஞ்சல் திணைக்களத்தின் அறிவித்தல்!

(கொழும்பு)

நத்தார் தினத்தை முன்னிட்டு வெளிநாடுகளுக்கு வானூர்தி மூலம் பொருட்களை அனுப்புவோர் தமது பொருட்களை அஞ்சலிடும் திகதி தொடர்பாக அஞ்சல் திணைக்களம் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

இதன்படி தென்னாபிரிக்கா மற்றும் ஏனைய ஆபிரிக்க நாடுகளுக்கு பொருட்களை அனுப்புவோர் எதிர்வரும் டிசம்பர் 5ஆம் திகதிக்கு முன்னர் தமது பொருட்களை அஞ்சலிட வேண்டும்.

அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து நாடுகளுக்கு எதிர்வரும் டிசம்பர் 9 ஆம் திகதிக்கு முன்னர் பொருட்கள் அஞ்சல் இடப்பட வேண்டும்.கனடா மற்றும் ஐக்கிய அமெரிக்காவுக்கான பொதிகள் டிசம்பர் மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் அஞ்சலிடப்படவேண்டும்.

ஐரோப்பா மற்றும் மத்திய தரை நாடுகளுக்கான பொதிகளும் பிரான்ஸிக்கான பொதிகளும் டிசம்பா மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் அஞ்சலிடப்படவேண்டும். ஜேர்மனி மற்றும் நெதர்லாந்துக்கான பொதிகள் டிசம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் அஞ்சலிடப்படவேண்டும்.

இந்தியா,பாங்களாதேஷ்,பாகிஸ்தான் , நேபாளம்,பூட்டான் ஆகிய நாடுகளுக்கு டிசம்பர் 12ஆம் திகதிக்கு முன்னரும் மலேசியா, சிங்கப்பூர், சீனா,கொங்கொங் ,பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான பொதிகள் டிசம்பர் 9ஆம் திகதிக்கு முன்னர் அஞ்சலிடப்படவேண்டும்.ஐக்கிய இராட்சியத்திற்கான பொதிகள் டிசம்பர் 6ஆம் திகதிக்கு முன்னரும் ஜப்பானுக்கான பொதிகள் டிசம்பர் 13ஆம் திகதிக்கு முன் னரும் மாலைதீவுக்கான பொதிகள் டிசம்பர் 16ஆம் திகதிக்கு முன்ன ரும் அஞ்சலிடப்படவேண்டும்.

இதேவேளை, கடல்வழியாக தமது பொதிகளை அனுப்புவோர் இந்தியா, மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு எதிர்வரும் 22ஆம் திக்திக்கு முன்னரும் மாலைதீவுக்கான பொதிகள் 6ஆம் திகதியும், ஜப்பானுக்கான பொதிகள் 16ஆம் திகதிக்கு முன்னரும் அஞ்சலிடப்படவேண்டும் என அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-9)

பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் அதை கவர்ச்சி மிக்க பலன்கள் கிட்டும் வாழ்க்கையாக கருதக்கூடாது.
-டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

# தேர்தல் கண்காணிப்பில் நடுநிலை தேவை

எதிர்வரும் நவம்பர் மாதம் 17ஆம்திகதி நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலை கண்காணிப்பதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புக்கள் முன்வந்துள்ளன.

கண்காணிப்பு நடவடிக்கைகள் பற்றி பிரசாரம் செய்யும் அளவிற்கு அவற்றின் பணி நடைபெறவில்லையென்பது பலரதும் அபிப்பிராயம்.

'கண்காணிப்பு' என்ற பணியில் இறங்கி விட்டால் அதனை முழுமையாக செய்து முடிப்பதற்கும், தாம் கண்டவற்றை பகிரங்கமாக வெளிப்படுத்துவதற்கும் கண்காணிப்பு ஏற்பாட்டாளர்கள் துணியவேண்டும்.

தேர்தல் ஒழுங்கீனங்களை வெளிப்படுத்துவதில் பின்னடிப்புக்கள் இருக்குமாயின் அத்தகைய கண்காணிப்பு தேவையற்றதாகவே இருக்கும்.

அதேவேளை தேர்தல் ஒழுங்கீனமாக நடந்துள்ளதென்ற அறிக்கையை தேர்தல் கண்காணிப்பாளர்கள் வெளியிடுகின்ற போது அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள்-மாற்று ஏற்பாடுகளை தேர்தல் திணைக்களம் செய்யத்தவறின் கண்காணிப்பில் எந்த பிரயோசனமும் ஏற்படமாட்டாது.

பிழையென்று தெரிந்தும் சரிபோடும் சம்பவமாகவே அது கொள்ளப்படும். எனவே கண்காணிப்பு என்ற பெரும் எடுப்பில் ஆரம்பிக்கப்படும் பணி செம்மையாக நடைபெறுவதை உரிய ஏற்பாட்டாளர்களும் அமைப்புகளும் உறுதி செய்து கொள்ளவேண்டும்.

தேர்தலை கண்காணிப்பதற்கு உலக அமைப்புகள் நிதி உதவி செய்கின்றன. அந்த நிதியை செலவு செய்ய வேண்டும் என்பதற்காக தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவதாயின் அது தேவையற்ற ஒன்றாகவே இருக்கும்.

நாட்டில் கடந்த கால தேர்தல்களின் போது கண்காணிப்பு பணி இடம்பெறாதாயினும் கண்காணிப்பாளர்களின் செயற்பாடுகள் அதிர்ச்சி தருவதாகவே இருந்தன.

தேர்தலை கண்காணிப்பதா? இல்லையா? என்ற முடிபை எடுக்காது இறுதி நேரம் வரை இருந்து விட்டு எடுக்கப்படும் நேர்த்தன்மையான முடிபு கண்காணிப்பின் செம்மைக்கு பாதகமாக அமைகின்றது.

இதன் காரணமாக பெருத்தமற்றவர்கள் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவது தமது பணியின் மகத்துவத்தை துஷ்பிரயோகம் செய்வது போன்ற தவறுகள் கடந்த காலங்களில் நடந்துள்ளன.

அதேநேரம் இலங்கையின் தேர்தல் களத்தில் ஆளும் தரப்பைச்சார்ந்த வேட்பாளர்களுக்கான 'கள்ளவாக்கு' போடும் கலாசாரம் நீண்டு நிலைக்கிறது. இத்தகைய கலாசார முறைமைக்கு முடிபு கட்டி ஆளும் தரப்பையும் எதிர்த்தரப்பையும் சம கண்கொண்டு நோக்கும் தேர்தல் கடமைகள் நடைபெறுவதையும் கண்காணிப்புக்குழு உறுதி செய்ய வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# சிறுபான்மையின மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் - ரணில்

(கொழும்பு)

சமாதானத்தின் தேவையினை உணர்ந்து சிறு பான்மை மக்களாகிய தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் எதிர்வரும் 17ஆம் திகதி கண்டிப்பாக தமது வாக்குரிமைகளைப் பயன்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு கொட்டாஞ்சேனை சந்தியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டில் நிலவுகின்ற போர் பீதிக்கு முற்றுப்புள்ளி வைப்போம். நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவோம். சிறுபான்மை மக்கள் உட்பட அனைவரும் சமாதானத்தின் தேவைகளை உணர்ந்து வாக்களிக்க வேண்டும்.



நாட்டைக் கட்டியெழுப்பும் ஆணையை எனக்கு வழங்குங்கள் வேலைத்திட்டங்களை எப்படிசெயற்படுத்துவது என்று நான் செய்து காட்டுகின்றேன் என்று தெரிவித்தார். (ற)

# 'ஐக்கிய இலங்கை' கோட்பாட்டிற்கமைய அதிகாரப் பரவலாக்கல் மூலமே தீர்வு

## -பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்



(கொழும்பு)

ஐககிய இலங்கை என்ற கட்டமைப்பில் இராணுவ வெளிவிவகாரம், நிதி அதிகாரங்கள் மத்திய அரசிடமே இருக்கும் வகையிலான கூட்டாட்சி முறையையே நாம் முன்வைக்கிறோம் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பேச்சாளர் ஜி.எல. பீரிஸ் கூறியுள்ளார்.

நேறறு கொழும்பு ஊடகவியலாளர்களிடம் ஜீ.எல். பீரிஸ் இது தொடர்பில் கூறுகையில்,

நாங்கள் தேசப்பற்றாளர்கள் நாட்டினது முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவால் தொடங்கப்பட்டது எமது கட்சி. எமது செயற்பாடுகள் அனைத்தும் நாட்டினது நலன்களை மையப்படுத்தியதாகவே இருக்கும்.

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கை என்ற கோடபாட்டிற்கமைய அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு காண முயற்சிப்போம் இலங்கையில் பிரதேச ஒற்றுமை விடயத்தில் எதுவித சமரசத்துக்கான கேள்வியும் இல்லை.

இது ஒரே நாடு.ஆனால் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் நாம் முன்வைக்கும் கூட்டாட்சி முறையில் மைய அரசிடம் பெரும்பாலான அதிகாரங்கள் குவிந்து இருக்கும். இராணுவம் வரவு-செலவுத்திட்டம் வெளிவிவகாரம் ஆகியவை மைய அரசினது அதிகாரத்தின் கீழேயே இருக்கும.

இந்தக் கூட்டாட்சி அமைப்பு முறை தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஆலோசனைகள் மேற்கொள்ளப்படும். தென்னிலங்கையில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்தாமல் இனப்பிரச்சினைக்குத தீர்வு காண முடியாது என்பதில் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க உறுதியாகவுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு ஏற்பட்டு அரசியல் யாப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படும் முன்பாக மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்படும்.கூட்டாட்சி முறை என்பது ஓஸ்லோவில் 2002ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம் என்றார். (ற)

# 'மஹிந்தவின் சிந்தனையை' செயற்படுத்த ரணிலின் ஒத்துழைப்பை பெறுவாராம்


## காலியில் மஹிந்த

(காலி)

"மஹிந்தவின் சிந்தனை" என்ற தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட வாக்குறுதிகளைச் செயற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியினரின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளவுள்ளதாக பிரதமரும் ஜனாதிபதி வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு நாட்டில் சமாதானத்தினை ஏற்படுத்தும் விடயத்தில் பல கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற தோதல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவிததார்.



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை இணைத்துக் கொண்டு நாட்டில் கெளரவமான சமாதானத்தினை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் அங்கு அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# இந்தியாவில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை அமைக்க தெற்காசிய நாடுகள் இணக்கம்

(கொழும்பு)

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமொன்றை இந்தியாவில் அமைப்பதற்கு தெற்காசிய நாடுகள் இணங்கியுள்ளன.

சுனாமி, பூகம்பம்,வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக பிராந்திய நாடுகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு ஏதுவாக இந்த மத்திய நிலையம் உருவாக்கப்படவுள்ளது.

பங்காளதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற தெற்காசிய நாடுகளின் அதிகாரிகள் கூட்டத்திலேயே இந்த இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 11மாதங்களில் தெற்காசிய நாடுகள் மிகவும் மோசமாக இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டன. கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26ஆம் திகதி சுனாமிப் பேரலையும் இவ் வருடம் ஒக்டோபர் மாதம் பூகம்பமும் தெற்காசிய நாடுகளைத் தாக்கியுள்ளன.


மேலும், இத்தகைய இயற்கை அனர்த்தங்களின் பின்னர் நிவாரணப் பணிகள் உட்பட மீள்கட்டமைப்பு, புனர்வாழவு தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதில் குறிப்பிடட நாடுகளின் அதிகாரிகளுக்கு போதுமான வசதி வாய்ப்புகள் இல்லாமலிருப்பதாகவும் இம் மாநாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ற-8)

# அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மனறம் மாதாந்த பௌர்ணமி தினத்தில் நடாத்திவரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறை பாராயணம் என்பன நாளை மறுதினம் செவ் வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு ஆனைக்கோட்டை ஸ்ரீகாசிகாண்டமடம் ஸ்ரீகாசி விசாலாட்சி சமேத ஸ்ரீகாசி விஸ்வநாதர் தேவஸ்தானத்தில் அகில இலங்கைத் திருமுறை மன்றத் தலைவர் பண்டிதர் ல.போன்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது (த)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



உலகப் பற்றுத்தான் நம்மை அறியாமையிலும் பந்தத்திலும் மூழ்க வைக்கிறது. இந்தப பந்தத்திலிருந்து விடுபடவே நாம் முயல வேண்டும். அந்த முயற்சியில் நாம் வெற்றி பெற நமது மனதின் ஒத்துழைப்பே மிகவும் அவசியம். எனவே நாம் நமது மனதையும், புலன்களையும் கட்டுப்படுத்தி இறைவனை அறிய அவற்றை உள்நோக்கித் திருப்பவேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

# இறுதிப் போட்டியிலும் இந்தியா வென்றது



(பரோடா)

இலங்கை இந்திய அணிகளுக்கிடையிலான ஏழாவதும் இறுதியுமான சர்வதேச சக்கிரிக்கெட் போட்டியிலும் இந்திய அணி வெற்றி பெற்றது.

நேற்றைய போட்டியில் இந்திய அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கையணி முதலில் துடுப்பெடுத்தாட முடிபு செய்தது. முதலில் ஆடிய இலங்கை அணி 50 ஓவர்களின் முடிபில் 9 விக்கெட் இழப்பிற்கு 244 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஆனால்ட் 68 ஓட்டங்களையும் அத்தப்பத்து 59 ஓட்டங்களையும் பெற்றனர். சந்தன ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் சங்கக்கார 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இர்பான்பதான், ஆர்பி சிங் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும் அகார்கர் 2 விக்கெட்டுக்களையும் கார்த்திக் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 39.3 ஓவர்கள் முடிபில் 5 விக்கெட் இழப்பிற்கு 245 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

எஸ்.தோனி 80 ஓட்டங்களையும் சேவாக், டெண்டுல்கார், பதான் முறையே 35,39,35ஓட்டங்களையும் ட்ராவிட் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சொய்சா2 விக்கெட்டுக்களையும் பெர்ணான்டோ, டில்கார, சந்தனா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

நேற்றைய போட்டியில் ஆட்டநாயகனாக பதானும் ஆட்டத்தின் தொடர் நாயகனாக தோனியும் தெரிவு செய்யப்பட்ட னர். (ச)

# தமிழ்க்கூட்டமைப்பின்...

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தமிழ் மக்களின் வாக்குகளையே ரணில் விக்கிரமசிங்க நம்பியிருந்தார். ஆனால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட் டமைப்பினர் தேர்தலில் அக்கறை காட்டத் தேவையில்லை என தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

தமிழ் மக்களின் முடிபுகளுக்கு தாம் பக்கபலமாக இருப்பதாக விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார். இந்நிலையில் சிறுபான்மையினரின் வாக்குகளை அதிகளவு சம்பாதிக்கலாம் என எதிர்பார்த்தே ரணில் இம் முடிபுகளினால் அதிருப்தியடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷவே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் எனவும் எந்நிலையிலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிப் பீடம் ஏறமக்கள் சம்மதிக்க மாட்டார்கள் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் எவ்வித வன்முறைச் சம்பவங்களிலும் ஈடுபாடாது நேர்மையாக செயற்படுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

(ற-ச-8)


## மூன்றாம் ஆண்டு நினைவில்...

### அமரர் கணபதி கணேசன்
### (கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்)



மூன்றாண்டுகள் முடிந்தன
மூன்று மணித்துளியாய்,
மூண்ட துயரமதோ!
யுக யுகமாய்...
உம்மை அறிந்தோம்
எம் உயிராய்,
உம்மை உணர்ந்தோம்
எம் பரிவாய்,
உம்மை இழந்தோம்
எம் துயராய்,
இன்றும் நாம் மண்மேல்
உம் நினைவாய்...

—குடும்பத்தினர்.

பிருந்தாவனம்'
28/36 மணல்தறை லேன்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

13.11.2005

(C1831)


# காணாமல் போனோரின் விபரங்களை இன்று பதிவு செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

1995இற்கு பின் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டுக் காணாமல் போனவர்களின் விபரங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சேகரித்து வருகின்றனர்.

இதன் முதற்கட்ட பதிவுகள் நேற்றுக் காலை 9.00-3.00 மணிவரை நடைபெற்றது. தொடர்ந்து இன்றும் காலை 9-மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் (3 ஆம் மாடி) நடைபெறவுள்ளது.

நேற்றுப் பதிவுகளை மேற்கொள்ளத்தவறியவர்கள் அனைவரும் அனைத்து ஆவணங்களுடனும் வந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு காணாமல் போன சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (ச)

# கூட்டு அரசாங்கம் அமைப்பது குறித்து ஸ்ரீ.சு.கட்சியுடன் விவாதம் நடத்தப்படும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியாக தாம் தெரிவு செய்யப்பட்டால் நாடாளுமன்றம் கலைக்கப்படு மா என்பது குறித்து ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்துள்ளார்.

கொழும்பு மேயர் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் இது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க பேசுகையில், ஜனாதிபதியாக தாம் தெரிவு செய்யப்பட்ட பின் முதல் பணியாக அமைதிப் பேச்சுக்கள் தொடர்பாக சுதந்திரக் கட்சியுடன் விவாதிக்கப்படும். இநத விவாதங்களின் அடிப்படையிலே நாடாளுமன்றம் கலைக்கப்படுமா இல்லையா என்பது குறித்து முடிவெடுக்கப்படும்.

அதேபோல் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கூட்டு அரசாங்கம் அமைப்பது குறித்தும் இந்த விவாதங்களுக்கமைய வே முடிவெடுப்போம்.

சுதந்திரக்கட்சியினர் தயாராக இருந்தால் நாமும் அதை ஏற்கிறோம். ஆனால் அமைதி முயற்சிகள் தொடர்பில் நாம் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு அவர்கள் ஆதரவளிக்க வேண்டும். கிழக்கு மாகாண பாதுகாப்பு மற்றும் ஆழிப்பேரலை மீளமைப்பு பணிகளை நாம் உடனடியாக மேற்கொள்வோம். நாடு பிளவு பட்டு விடுமோ என அச்சப்படுகின்ற சிங்கள வர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்போம். அதிக பட்ச அதிகாரப் பகிர்வு முறையை நாம் முன்வைத்தாலும் நாட்டின் பிரதேச ஒற் றுமை பாதுகாக்கப்படும். எனினும் இனப்பி ரச்சினைக்கான இறு தித்தீர்வான நாட்டினது 13 மில்லியன் வாக்காளர்களின் வாக்களிப்பு மூலமே இது இறுதி செய்யப்படும் இறுதித்தீர்வானது எமது தீர்வு அல்ல மக்களின் தீர்வு. அதை ஏற்பதும் ஏற்காததும் உங்களது விரும்பம் என்றார். (ற)

## லலித் முன்னணியின் வேட்பாளர் ரணிலுக்கு ஆதரவென அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஐக்கியலலித் முன்னணியின் சார்பில் போட்டியிடுவதற்காக அறிவித்திருந்த வேட்பாளர் அருணா டி சில்வா ஆதரவளித்துள்ளார்.

ரணிலின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு தாம் அவரை ஆதரிப்பதாக நுகேகொடவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் பரப்புரைக்கூட்டத்தில் அருணா டி சில்வா அறிவித்துள்ளார்.

இந்தக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய ரணில் விக்கிரமசிங்க;

மாகாண சபைகளின் அதிகாரங்களுக்கும் கூடுதலான அதிகாரங்களைப் பெறுகின்ற எந்த ஒரு நிர்வாக அமைப்பும் பிர தேச ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாக இல்லாதிருக்க வேண்டும். விடுதலைப் புலிகளினுடனான பேச்சுவார்த்தைக்கு முன்னதாக தென்னிலங்கையின் அனைத்து கட்சிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்து வோம் என்றார். (ற)

## சிப்பாய்களை...

வழிமறித்த ஒன்பது பேரும் அவர்களை கத்தியால் குத்தியும் துப்பாக்கியால் சுட்டும் காயப்படுத்தினர்.

சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த குமார்ரதுங்க என்ற சிப்பாய் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே தாக்குதலை மேற்கொண்டதாக ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-ற,4)

## வாகரையில்...

யில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் இடம் பெற்ற பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி பிரதேசம் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தபோதும் தங்களின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெறவில்லையென விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பதில் நீதிபதி வினோபா இந்திரன் முன்னிலையில் இது தொடர்பான மரண விசாரணைகள் நடைபெற்றன. சாட்சியங்களை பதிவு செய்த நீதிபதி இச் சம்பவம் விபத்து மரணம் என தீர்ப்பளித்தார். (ச-ற-4)


மனோகரா யாழ்.

யாழ். நகரில் முதன்முறையாக DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்




விஜய் + அசின்

கா.நேரம் 10.30, 2.30 6.30, 9.30(பு.நே)

சில தினங்கள் மட்டும் காலை 8.30 காட்சி காண்பிக்கப்படும்

ராஜா சினிமா

இந்தியாவிலும் யாழ்ப்பாணம் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

தனுஷ், பிரியாமணி மற்றும் பலர் நடித்த

பாலுமகேந்திராவின் கதை, வசனத்தில் இளையராஜாவின் இசையில்

அது ஒரு கனாக்காலம்

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(நாளை முதல்) 14.11.2005–20.11.2005 வரை இரவுக் காட்சிகள் காண்பிக்கப்பட மாட்டாது

17.11.2005, 18.11.2005 படக்காட்சி காண்பிக்கப்பட மாட்டாது

நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்

பார்த்திபன், லக்சுமிராய், வடிவேலு நடித்த

குண்டக்க மண்டக்க

கா.நே: 11.00, 02.45, 6.00, (பு.நே)

EXPOAIR your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.



எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.